


# இலக்கு

வாராந்த மின்னிதழ்

இதழ் : 39 • 18.08.2019

GLOBAL TAMIL MEDIA CENTRE, USA • ilakku2009@gmail.com

அனைத்துலக தமிழ் ஊடக மையம்


## கோத்தபாயவிற்கு வழிவிட்டது ரணிலும், கூட்டமைப்பினருமே

தமிழ்த் தேசிய அரசியல் அவதானிப்பு மையம் அறிக்கை





## பேரம் பேசுவதற்கு இது பொன்னான சந்தர்ப்பம்

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் கஜேந்திரன்

## கோத்தபாயவின் வெற்றி யாருக்கு ஆபத்தானது?

வேல்ஸ் இல் இருந்து அருஷ்



## தனிச்சிங்கள வாக்குகள் எதிர் மேவின வாக்குகள்?

நிலாந்தன்



## பங்களாதேஷில் தீ

15 ஆயிரம் வீடுகள் எரிந்து நாசம்

# கோட்டாவிற்கு வழிவிட்டது ரணிலும், கூட்டமைப்பினருமே

## தமிழ்த் தேசிய அரசியல் அவதானிப்பு மையம் அறிக்கை

பொதுஜன பெரமுனவின் சனாதிபதி வேட்பாளராக கோத்தபாய ராஜபக்ஸவை நிறுத்துவதற்கான அரசியல் சூழ்நிலை உருவாகியமைக்கு ரணில் மற்றும் கூட்டமைப்பினரே களமமைத்து கொடுத்தனர் என்று ஐரோப்பாவை தளமாக கொண்டு செயற்படும் தமிழ்த் தேசிய அரசியல் அவதானிப்பு மையம் தெரிவித்துள்ளதோடு இதற்கார முழுப்பொறுப்பையும் இவர்களை ஏற்க வேண்டும்.என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

2009 இறுதி யுத்தத்தின்போது இலங்கை அரச படைகளால் இலட்சக்கணக்கான பொதுமக்கள் திட்டமிட்டு படுகொலை செய்யப்பட்டபோது கோட்டாவே பாதுகாப்பு செயலாளராக இருந்து யுத்தத்தை வழிநடத்தி சென்றார். போர்குற்றம்,பொறுப்பு கூறல் மனித உரிமை மீறல் போன்ற அனைத்து விடயங்களிலிருந்தும் நான்கரை வருடகாலமாக மகிந்த,கோத்தா மற்றும் இராணுவத் தளபதிகள் போன்றோர்களை ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவையிலிருந்து ரணில் அரசாங்கமும் சம்பந்தனும் அவர்களுடைய பங்காளி கட்சிகள்(ரெலோ,புளெட்) கையெழுத்திட்டு காலநீடிப்பை பெற்றுகொடுத்து போர் குற்றவாளிகளை பாதுகாத்துவருகின்றனர்.



அத்தோடு தமிழ் மக்களுக்கு விரோதம அரசாங்கத்தின், பௌத்தமயமாக்கல், நிலஅபகரிப்பு, அரசியல் கைதிகள் விவகாரம்,காணாமல் போனோர் விவகாரம் மற்றும் வரவு செலவுத்திட்டத்தில் பாதுகாப்பிற்கு அதிக நிதி ஒதுக்கீடு போன்ற விடயங்களிற்கு ஆதரவு வழங்கிவிட்டு தொடர்ச்சியாக போர் குற்றவாளிகளை பாதுகாத்து வந்தவர்கள் இன்று சனாதிபதி வேட்பளராக இரத்தக் கறை படிந்த கோத்தபாய ராஜபக்சா களமிறக்கபட்டுள்ளார் இவர் சனாதிபதியாக வந்தால் வெள்ளைவான் வரும் காட்டாட்சி வரும் ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்படுவார்கள் என கூக்குரல் இடும் சம்பந்தனும் அவரது பரிவாரங்களுமே இன அழிப்பை நடாத்தியவர்களை நான்கரை

தொடர்ச்சி 4ம் பக்கம்

## சிங்கள - பௌத்த கொள்கையுள்ள ஆட்சியே நாட்டுக்கு தேவையாம்! அமைச்சர் சஜித் கூறுகிறார்



சிங்கள — பௌத்த கொள்கைகளுடனான ஆட்சியே நாட்டுக்குத் தற்போது தேவைப்படுவதாக அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். எவ்வாறான எதிர்ப்புகள் வந் தாலும், அடுத்த சனாதிபதித் தேர்தலில் தான் களமிறங்குவது உறுதி என்றும் அவர் கூறினார்.

அம்பாந்தோட்டையில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் உரையாற் றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கை யில் இன்னும் இரண்டு அல்லது மூன்று மாதங்களில் நாட்டின் எதிர்க்காலத்தைத் தீர்மானிக்கும் சனாதிபதித் தேர்தல் நடைபெற வுள்ளது. இது தொடர்பாக ஒவ்வொரு தரப்பினரும் ஒவ்வொரு கருத்துக்களை வெளியிட்டு வருகிறார்கள். ஆனால், நான் ஒரு விட யத்தை உறுதியாகக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். அதாவது, இம்முறை ஜனாதி பதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸ ஆகிய நான் நிச்சயமாக வேட்பாள ராகக் களமிறங்குவேன் என்பது மட்டும் உறுதியாகும். இது தொடர்பாக இரண்டு பேச்சுக்களுக்கு இனிமேல் இடம் கிடையாது. இந்த சனாதிபதித் தேர்தல் குறித்து மக்கள் தீர்மானங்களை எடுக்கும்போது சில விடயங் களைச் சிந்தித்துப் பார்க்கவேண் டும். விசேடமாக சுதந்திரமாகக் கருத்துக்களை முன்வைக்கும் நிலைமை, அச்சுறுத்தல் இன்றி வாழும் சூழ்நிலை என்பன தொடர் பாக மக்கள் சிந்திக்க வேண்டும். மக்களுக்கு ஜனநாயகத்தை வழங்குவதோடு, தேசிய பாது காப்பையும் பலப்படுத்தவேண் டும். இதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பதே எமது பிரதான இலக்காகும். சிங் கள —பௌத்த கொள்கைகளுட னான ஆட்சியே இந்த நாட்டுக்கு இப்போது தேவைப்படுகிறது — என்றார்.

## கோத்தாவை ஆதரிக்க எனக்கென்ன பைத்தியமா? - மைத்திரி



சிறிலங்கா அதிபர் தேர்தலில் பொதுஜன பெரமுனவின் வேட்பாளராக போட்டியிடும் கோத்தாபய ராஜபக்சவை ஆதரிக்கமாட்டேன் என்று சிறிலங்கா அதிபர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.கடந்த செவ்வாய்க்கிழமை அமைச்சரவைக் கூட்டம் முடிந்த பின்னர், அதிபர் செயலகத்தில் மேல் மாடியில் உள்ள அதிபரின் அறைக்குச் சென்ற சில அமைச்சர்கள், மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்தனர்.

அமைச்சர்களில் ஒருவர், “அதிபர் வேட் பாளராக நிறுத்தப்பட்டுள்ள முன்னாள் பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்சவை ஆதரிக்கப் போகிறீர்களா?” என கேட்டார்.

அந்தக் கேள்வியால், சிறிலங்கா அதிபர் மைத்திரிபால சிறிசேன, கோபமடைந்தார். அவரது கோபம், அவர் அளித்த பதிலிலும் பிரதிபலித்தது. “உங்களுக்கு என்ன பைத்தியமா?” “நான் அதை ஒருபோதும் செய்யமாட்டேன். நான் அத்தகைய முடிவை எடுக்கவில்லை.” என்று கோபத்துடன் தெரிவித்துள்ளார்.

## குருநகர் மேடையில் அம்பலமானது சுமந்திரன்-ரணில் அரசியல் நாடகம்

யாழ். குருநகர் பகுதியில் நவீன வசதிகளுடன் அமையவுள்ள புதிய துறை முகத்திற்கான அடிக்கல் நாட்டு விழா சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்றிரு ந்தது.சுமந்திரன் தனது ஆதரவாளரும் யாழ்.மேயருமான ஆர்னோல்ட்டின் விருப்ப கோரிக்கைக்கு இணங்கவே சாதாரண அடிக்கல் நாட்டும் வைபவத்தினை குருநகரில் மேடைபோட்டு முன்னெத்திருந்தார்.

இந்த மேடையில் தமிழரின் அபிலாஷை விவகாரத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடு என்ன என்பதை பகிரங்கப் படுத்துங்கள். எங்கள் தலைவிதியை நாங்களே தீர்மானிக்கின்ற ஆட்சி உரிமை எங்களிடம் வழங்கப்பட வேண்டும் என்பதற்காவே கூட்டமைப்பு கடந்த நான்கு வருடங்களாக ஆளும் அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கி வருவதாக சுமந்திரன் குறிப்பிட்டார். பின்னர் சொல்லி வைத்தால் போன்று அதிகாரப் பகிர்வு தொடர்பாக அரசியலமைப்பு பேரவை தனது அறிக்கையில் வெளிப்படுத்தியுள்ள கொள்கைக் கோட்பாடே தமிழ் மக்களின் எதிர்பார்ப்புத் தொடர்பான ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரே நிலைப்பாடு என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதிலளித் துள்ளார். தமிழ்த் தேசிய அடிப்படைக் கோட் பாடுகள் அற்ற ஒற்றை யாட்சியை மையப்படுத்திய புதிய அரசியலமைப்புக்கான இடைக்கால அறிக்கையை தமிழர்கள் ஏற்றுக்கொள்கின்றார்களா இல்லையா என்பதற்கு அப்பால் சுமந்திரனும், ரணிலும் தமிழ் மக்களை ஏமாற்றுவதற்காக திட்டமிட்டு உரைகளை நிகழ்த்தியிருக்கின்றமை அம்பலமாகியுள்ளது.

இதேவேளை இந்த விடயம் வெளிப் பட்டபோது, ஐ.தே.க.வின் நிலைப்பாடு தெரியாமலா இத்தனை காலமும் சுமந்திரன் ரணிலுடன் பயணிக்கின்றார் என்ற கேள்விகளும் சதாரண பொதுமக்களால் அரசல்புரசலாக பேசப்பட்டுள்ளது.

# பேரம் பேசுவதற்கு இது பொன்னான சந்தர்ப்பம்

## கஜேந்திரன்



கோத்தபாய ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டதன் மூலம் பேரம் பேசலுக்கான பொன்னான வாய்ப்பு தமிழ் தரப்பிற்கு கிடைத்திருப்பதாக தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செ.கஜேந்திரன் தெரிவித்தார். வவுனியா கனகராயன் குளத்தில் இன்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட பின்னர் கருத்து தெரிவிக்கும் போதே மேற்படி தெரிவித்தார்.

மேலும் தெரிவித்த அவர். அண்மையில் பொது ஜன பெரமுனவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற மாநாட்டில் தமிழர்களிற்கு ஆபத்தான பல விடயங்கள் அறிவிக்கபட்டிருப்பதுடன் தமிழர்கள் மீது இன அழிப்பை மேற்கொண்ட கோத்தபாய ராஜபக்ச சனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டிருக்கிறார். இது மீண்டும் முள்ளிவாய்க்கால் நோக்கி தமிழ் மக்களை அழைத்து செல்லும் என்ற அச்ச நிலையை அவர்களிடத்தில் ஏற்படுத்தியிருக்கிறது. அவர் தமிழர் பகுதியை சிங்கள பௌத்த மயமாக்குகின்ற மிகவேகமான செயற்பாட்டை மேற்கொண்டு தமிழர்களை தனித்துவமாக வாழமுடியாத வண்ணம் செயற்பாடுகளை அரங்கேற்றிய ஒரு ஆபத்தானவர். அவர் எந்த சூழலிலும் வெற்றி பெற்று விடக்கூடாது. தமிழர்களிற்கு ஆபத்தானவர் போலவே இந்தியா மற்றும் மேற்கு நாடுகளிற்கும் விரும்படாத ஒருவராகவும் அவர்

தொடர்ச்சி 4ம் பக்கம்

# தமிழர்களுக்கு நிச்சயம் இருண்ட யுகம்!

## விக்னேஸ்வரன்



கோத்தாபய ராஜபக்ச சனாதிபதியாக வந்தால் தமிழ் மக்களுக்கு இருண்ட யுகம் ஒன்று உருவாகும் என்பது நிச்சயம் என வட மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்துள்ள அவர், கோத்தபாய ராஜபக்சவிற்கு எதிராக இரண்டு மூன்று வழக்குகள் இருக்கின்றன. மஹிந்த ராஜபக்ச எதற்காக அவரை சனாதிபதிதி வேட்பாளராக தெரிவு செய்தார் என்று தெரியவில்லை. கோத்தபாய ராஜபக்ச வந்தால் தமிழ் மக்களுக்கு இருண்ட யுகம் ஒன்று உருவாகும் என்பது நிச்சயம். ஏனெனில் அவர் இது சிங்கள நாடு என்ற எண்ணத்தில் இருப்பவர். அதனை உறுதி செய்வதற்காக எந்தவொரு வன்முறை செயல்களிலும் ஈடுபடக்கூடியவர். அதனால் கோத்தபாயவுக்கு ஆதரவு வழங்குமாறு நான் எந்த இடத்திலும் கூறவில்லை. அவருக்கு ஆதரவு வழங்கக் கூடாது என்பதே எனது கருத்து. உண்மையான தமிழன் ஒருவன் ஒருபோதும் கோத்தபாய ராஜபக்சவிற்கு வாக்களிக்க மாட்டான் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சோபா உடன்படிக்கை குறித்த பேச்சுக்களை இடைநிறுத்த அமெரிக்கா தீர்மானம்

சனாதிபதித் தேர்தல் நிறைவடையும்வரை இலங்கையுடனான சோபா உடன்படிக்கை குறித்த பேச்சுக்களை இடைநிறுத்த அமெரிக்கா தீர்மானித்துள்ளது. இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அண்மையில் சனாதிபதிதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்து விசேட கலந்துரையாடல் ஒன்றில் ஈடுபட்டார். இதன்போதே, அமெரிக்கா— இலங்கைக்கு இடையிலான சோபா உடன்பாடு தொடர்பான பேச்சை இடைநிறுத்துவது குறித்த நிலைப்பாட்டை, அமெரிக்கா சார்பில் தூதுவர் வெளிப்படுத்தியுள்ளதாக தற்போது தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதாவது, சோபா உடன்படிக்கை தொடர்பாக தற்போது இலங்கையில் சமகால அரசியல் களத்தில் பல்வேறு கருத்துக்களும் விமர்சனங்களும் முன்வைக்கப்படுகின்றமையால், சனாதிபதித் தேர்தல்வரை இதுதொடர்பாக எவ்விதப் பேச்சுவார்த்தையிலும் அமெரிக்கா ஈடுபடாது என அவர் அறிவித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்தோடு, மிலேனியம் சவால் நிதியத்தின் 480 மில்லியன் அமெரிக்க டொலர் உதவித் தொகையைப் பெறுவதற்கான கால அவகாசம் முடிந்து விட்டதென்றும் அமெரிக்கத் தூதுவர் அலெய்னா ரெப்லிட்ஸ், சனாதிபதிதி மைத்திரிபால சிறிசேனவிடம் தெரிவித்துள்ளார். மேலும், இந்த விடயம் குறித்து விவாதிப்பதற்கான இலங்கையின் உரிமையை தாங்கள் மதிப்பதாகவும் அவர் இதன்போது குறிப்பிட்டுள்ளார். அதேநேரம், இலங்கைக்கான புதிய அமெரிக்க துணைத் தூதுவரை அறிமுகப்படுத்துவதற்காக, அலெய்னா ரெப்லிட்ஸ் சனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடனான இன்னொரு சந்திப்புக்கு தற்போது அனுமதி கோரியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# காணி விடுவிப்பும் எமது பொறுப்பும்

படையினரின் கட்டுப்பாட்டில் இருக்கும் மக்களுடைய காணிகளை 2018 இறுதிக்குள் அவர்களுக்கே வழங்குவேன் என சிறீலங்காவின் சனாதிபதி மைத்திரிபால சிறிசேன வாக்குறுதியளித்து ஒரு வருடம் சென்றுவிட்டது. சனாதிபதி தெரிவித்த காலக்கெடுவும் ஒன்பது மாதங்களுக்கு முன்னரே காலாவதியாகிவிட்டது. இப்போது சுமார் மூவாயிரத்துக்கும் அதிகமான ஏக்கர் மக்களுடைய காணிகள் படையினரின் கட்டுப்பாட்டில்தான் இருக்கின்றன. இந்தத் தகவல்கள் யாழ்ப்பாணத்தில் மூன்று தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற அபிவிருத்திக் குழுவின் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது. மற்றொரு தேர்தலை — அரசியல் மாற்றத்தை இலங்கைத் தீவு எதிர்கொண்டுள்ள நிலையில் இந்த பாரியளவு நிலங்களை மீட்பதற்கு என்ன செய்யப்போகிறோம் என்ற கேள்வி அனைவரிடமும் எழுகின்றது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த வாரம் யாழ்ப்பாணத்துக்கான விஜயம் செய்தார். நடைபெறப்போகும் சனாதிபதிதித் தேர்தலில் தமிழ் மக்களுடைய வாக்குகள் நிர்ணயிக்கும் வாக்குகளாக இருக்கலாம் என்ற நிலையில், இதனை இலக்காகக்கொண்ட அபிவிருத்தித் திட்டங்கள் சிலவற்றை அவர் ஆரம்பித்து வைத்தார். அதேவேளையில், யாழ். செயலகத்தில் இடம்பெற்ற அபிவிருத்திக்குழுக் கூட்டத்திலும் கலந்துகொண்டார். அப்போதுதான் படையினரின் கட்டுப்பாட்டில் இருக்கும் நிலங்கள் பற்றிய விபரம் அவருக்குச் சொல்லப்பட்டது. அதற்கு அவரிடமிருந்து சாதகமான பதில் எதுவும் வரவில்லை.

யாழ்ப்பாணத்தில் விவசாயத்துக்குப் பெயர்போன வலிகாமம் வடக்கிலேயே அதிகளவு நிலம் படையினரிடம் உள்ளது. இங்கு பலாலி வீதியின் கிழக்குப் புறமாகவுள்ள நிலம் விவசாயத்துக்கு மிகவும் பெறுமதியானது என்பது அனைவருக்கும் தெரியும். இந்தப் பகுதியில் பெருமளவு காய்கறிகளை உற்பத்தி செய்து யாழ்ப்பாண விவசாயிகளுக்குப் போட்டியாக குடாநாட்டிலேயே அவற்றை சந்தைப்படுத்தும் நடவடிக்கைகளிலும் சில வருடங்காக ஈடுபட்டார்கள். வடமாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன் அதற்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியதையடுத்தே அந்த நடவடிக்கைகள் கைவிடப்பட்டன. இப்போது வெளி மாவட்டங்களுக்கு அவை அனுப்பப்படுவதாகவும், அதன் மூலம் இராணுவத்துக்கு மேலதிக வருமானம் கிடைப்பதாகவும் சொல்லப்படுகின்றது.

யாழ்ப்பாண விவசாயிகள் வாழ்வாதாரத்துக்குத் திண்டாடிக் கொண்டிருக்கும் நிலையில், அவர்களுடைய நிலங்களை ஆக்கிரமித்திருக்கும் படையினர் பெருமளவு வருமானத்தை — அதன் மூலமாகப் பெற்றுக்கொள்கின்றார்கள். சில நிலங்கள் முகாம் மற்றும் பயிற்சித் தேவைகளுக்காகவும் பயன்படுத்தப்படுகின்றன. இது வடபகுதி விவசாயிகளைப் பொருளாதார ரீதியாகச் சுரண்டும் ஒரு செயற்பாடு. வடபகுதி விவசாயிகள் பொருளாதார ரீதியில் பெருமளவு பங்களிப்பைச் செய்துவந்த ஒரு காலம் இருந்தது. போரைக் காரணம் காட்டி அவர்களுடைய வளமான நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டதால், தங்களுடைய வாழ்வாதாரத்துக்கே திண்டாடும் நிலை அவர்களுக்கு ஏற்பட்டது. இப்போது போர் முடிவுக்கு வந்து பத்து வருடங்களின் பின்னரும் இந்த நிலைமை தொடர்கின்றது.

பலாலி வீதியின் கிழக்குப் பகுதியிலுள்ள காணிகளை விடுவிக்க 1,200 கோடி ரூபா தேவை என வடபகுதிக்கான பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதி தெரிவித்திருக்கின்றார். குறிப்பிட்ட காணிகளை ஒரே இரவிலோ அல்லது சில நாட்களிலோ ஆக்கிரமித்து, அங்குள்ள மக்களை அகதிகளாக்கிய படை—யினர் அங்கிருந்து வெளியேற இந்தளவு தொகை பணத்தைக் கேட்பதும் — அதனைக் காரணம் காட்டி அரசாங்கம் காலத்தைக் கடத்துவதும் ஏற்றுக்கொள்ளக் கூடியவையல்ல. இது அரசுக்கும் இராணுவத்துக்கும் இடையிலான ஒரு பிரச்சினை. காணிகளை மீட்டுக் கொடுப்பது அரசாங்கத்தின் பொறுப்பு. அதற்கான அழுத்தங்களைக் கொடுப்பது கூட்டமைப்பின் கடமை.

வடக்கு கிழக்கில் விவசாய நிலங்களும், மீன்பிடிக்கு வளமான கடற்பகுதிகளையும் இலக்கு வைத்த ஆக்கிரமிப்புக்கள் இப்போதும் தொடர்கின்றன. முல்லைத்தீவு மாவட்டத்தில் குறிப்பாக மீன்பிடிக் கிராமங்களை இலக்கு வைத்த ஆக்கிரமிப்புக்கள் இரண்டு நோக்கங்களுடன் இடம்பெறுகின்றன. ஒன்று — எல்லைக் கிராமங்களை வளைத்துப்போடுவது. இரண்டாவது தமிழ் மக்களின் பொருளாதாரத்தைப் பலவீனப்படுத்துவது. மற்றொரு தேர்தலை எதிர்கொள்ளும் நிலையில், பிரதான கட்சிகள் அனைத்துமே வடக்கை குறிவைக்கின்றன. எமது மக்களின் நலன்களை எவ்வாறு மீட்பது என்பதில் தமிழ்த் தலைமைகள் இப்போதாவது இராஜதந்திரத்துடன் செயற்பட வேண்டும்.



# எந்த முகத்துடன் செஞ்சோலை நினைவு வளைவை திறந்தீர்கள்?

## கூட்டமைப்பிடம் வடக்கு கிழக்கு கல்வி சமூகம் கேள்வி

எம்மினத்தின் எதிர்காலத்தினை நிர்ணயிக்கும் சக்தியை தம்மகத்தே கொண்டு மலரவிருந்த எம் இளம் பிஞ்சுகளை சிறீலங்கா வான் படைகள் இரக்கமின்றி மேற்கொண்ட மிலேச்சத்தனமான கொடூரமான தாக்குதலில் கொத்துக் கொத்தாக சருகாகினார்கள். ஆண்டுகள் எத்தனையானாலும் இந்த ரணம் என்றும் தமிழ் மக்களின் நினைவுகளிலிருந்து மாறப்போவதே இல்லை.

இவ்வாறிருக்கும்போது இந்த துன்பியல் சம்பவத்தில்கூட அரசியல் ஆதாயம் ஈட்டுவதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நினைவு வளைவொன்றை அமைத்து அதில் தமது பெயர்களை பொறித்து எந்த முகத்துடன் நினைவுத் தூபியை திறந்துவைத்தார்கள் என்று வடக்கு கிழக்கு கல்வி சமூகம் கேள்வி எழுப்பியுள்ளது.

இவ்விடயம் குறித்து வடக்கு கிழக்கு கல்வி சமூகம் கருத்து தெரிவிக்கையில்..

2006 ஆம் ஆண்டு ஆவணி 14ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டத்தில் வள்ளிபுனம் பகுதியில் உள்ள செஞ்சோலை சிறுவர் இல்ல வளாகம் மீது இலங்கை விமானப் படையின் நான்கு அதிவேக போர் விமானங்கள் மிலேச்சத்தனமாக வீசிய 16 குண்டுகளால் 61 பாடசாலை மாணவிகளின் உயிர்கள் அந்த இடத்திலேயே காவுகொள்ளப்பட்டன. 129 இற்கும் அதிகமான மாணவிகள் படுகாயங்களுக்கு உள்ளாகி அவயவங்களை இழந்தனர்.

கொல்லப்பட்டவர்களில் தமது பிள்ளைகளும் உள்ளனரா என்ற ஏக்கத்துடன் இரத்த வெள்ளத்தில் இறந்து கிடந்த மாணவிகளைத் தேடிய பெற்றோர்களின் வலிகளை வார்த்தைகளால் சொல்ல முடியாது. கொல்லப்பட்டவர்கள் தமது பிள்ளைகள்தான் என்று தெரிந்ததும் பெற்றோர்களும் உறவுகளும் கதறிய கதறல்களும் சிந்திய கண்ணீர்களும் எழுத்திலடங்காதவை.

எமது அடுத்த சந்ததியையும் எதிர்காலத்தினையும் நிர்ணயிப்பதற்காக பூவாக மலரவிருந்த இளம் மொட்டுக்கள் சருகாக்கப்பட்டன. இன்றும் இந்த சம்பவம் ஆறாத சம்பவமாக உள்ளது. இந்தச் சம்பவம் இடம்பெற்று 13 வருடங்கள் ஆகிவிட்டன. இந்த தாக்குதல்களுக்கு சர்வதேசங்கள் கண்டனங்கள் தெரிவித்திருந்தன. இருந்தபோதிலும் தமிழர்களுக்கு எதிரான இவ்வாறான தாக் குதல்கள் இடம்பெற்று காலங்கள் கழிகிறதே ஒழிய நீதி கிடைக்கவில்லை

இவ்வாறு இருக்கையில் நிர்மாணிக்கப்பட்ட நினைவு வளைவில் படுகொலை செய்யப்பட்ட சிறார்களின் பெயர்களையோ, படங்களையோ பதிப்பதற்கு காவல்துறையினரும் புலனாய் வாளர்களும் தடுத்திருந்தனர். வெறுமே வளைவினை மட்டுமே நிர்மானிப்பதற்கே இடமளித்திருந்தனர்

இந்நிலையில் தான் செஞ்சோனை நினைவு வளைவு செஞ்சோலை வளாக வீதி என்ற பெயருடன் மாத்திரமே திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த வளைவினை திறக்கும் நிகழ்வில் மாவைஐஐ சிவமோகன் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

பொலிஸாராலும், புலனாய்வாளர்களாலும் உயிர்நீத்த சிறார்களின் படங்களைக் கூடஐஐ ஆகக்குறைந்தது பெயர்களை கூட பதிவு செய்வதற்கு இடமளிக்காமையை எதிர்த்து இந்த நிகழ்வில் கலந்து கொண்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ன செய்தார்கள். எதுவுமே செய்யவில்லை மாறாக சிவமோகனின் வன்னிக்குறோஸ் நிறுவனத்தின் பெயரும் கூட்டமைப்பின் மாவைசேனாதிராசா, சிவமோகன் ஆகியோரின் பெயர்கள் பொறிக்கப்பட்டு அரசியல்சாயம் பூசப்பட்டுள்ளது. அரசாங்கத்தினை நாங்களே பாதுகாக்கின்றோம், சர்வதேசத்திடம் நீதி கோருக் கொண்டிருக்கின்றோம், தீர்வு தராவிட்டால் போராட்டம் வெடிக்கும், வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள், அரசியல் கைதிகள் விடயத்திற்கு தீர்வினை தேடுகின்றோம் என்றெல்லாம் வானளவு கதைகளை தற்போது அவிழ்த்து விட ஆரம்பித்திருக்கும் கூட்டமைப்புக்கு ஒரு நினைவுத்தூபியில் மிலேச்சத்தனமாக மடிந்த சிறார்களின் பெயர்களை பதிப்பதற்கான உரித்தைக் கூட பெற்றுக் கொடுக்க முடிந்திருக்கவில்லை.

இவ்வாறானவர்கள் ஐ.நா மன்றம் அல்ல சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு சென்று நீதியைப்பெற்றுத்தருவார்கள் என்று எவ்வாறு நம்புவது என்பது இங்குள்ள பிரதான கேள்வியாகும். பிரதமரை ஆட்சியில் அமர்த்துவதற்காக நீதிமன்றம் ஏறிய சட்டத்தரணி சுமந்திரனுக்கு இந்த அப்பாவிப் பிஞ்சுகளுக்காக ஏன் அவ்வாறு செய்ய முடியாது போய்விட்டது.

கூட்டமைப்பானது, வளைவொன்றை திறக்கும் நிகழ்வில் பங்கேற்று சருகாகிபோன மாணவர்களின் பெற்றோர் ஒருவர் கருத்து தெரிவிக்கையில் நாம் இந்த நினைவு வளைவிற்காக கூட்டமைப்பிற்கு வாக்களிக்கவில்லை. இறந்த எமது பிள்ளைகளுக்கு நீதியை பெற்றுத் தருவார்கள் என்ற நம்பிக்கையிலேயே வாக்களித்தோம் ஆனால் இவர்கள் எமது பிள்ளைகளை படுகொலை செய்த படை—யினரையும் அரசையும் பாதுகாத்துக்கொண்டு எமது பிள்ளைகளின் நினைவு வளைவினை திறப்பதற்கு எப்படித்தான் அவர்களுக்கு மனம் வந்ததோ தெரியவில்லை என்று ஆதங்கத்துடன் தெரிவித்ததாக அறியமுடிந்தது. உரிமைகளை வென்றெடுப்போம் என்ற கோசத்துடன் இருக்கும் கூட்டமைப்பு அதற்கு எந்தவிதமான செயற்பாட்டு நடவடிக்கைகளையும் எடுக்காது தமது மக்கள் பிரதிநிதித்துவ இருப்பினை பாதுகாப்பதற்காக தம் இன்னுயிர்களை ஆஃகுதியாக்கிய அனைத்து ஆத்மாக்களின் மீது நின்று அரசியல் செய்ய ஆரம்பித்துள்ளது.




இத்தகைய மிலேச்சத்தன அரசியல் தலைமைகளை தொடர்ந்தும் நம்பிக்கொண்டிருப்பது எம்மினைத்திற்கு நாமே வைத்துக்கொள்ளும் சூனியமாகவே அமையும். இவர்கள் மீட்பர்கள் அல்லர். விடுதலையாளர்கள் அல்லவர். இவர்கள் தம்மினத்தை அடகு வைத்து கருவறுத்தி அரசியல் இலாபமீட்டுபவர்கள் என்பதே நிதர்சனம் குறிப்பிட்டுள்ளது.

2ம் பக்கத் தொடர்ச்சி

வருடகாலம் பாதுகாத்தனர். இலங்கையில் நீதித்துறையும் ஜனநாயகமும் சுயாதீனமாக செயற்படுகின்றது என அடிக்கடி கூறிக் கொள்ளும் சம்பந்தனும் கூட்டமைப்பின் 14 பாராளுமன்ற உறுப்பினர்களும் தமிழ் மக்கள் மீது நடாத்தப்பட்ட இனப்படுகொலையின் கொலையாளிகளை ரணில் அரசோடு சேர்ந்து ஐநா மனித உரிமை பேரவையில் காலநீடிப்பை பெற்றுகொடுத்து பாதுகாத்ததோடு, தாமரை மொட்டினாலே தமிழீழம் மலரும் என்றும் யுத்தத்தை முடித்துவைத்த மகிந்தவே தேசியத் தலைவர் என்று பாராளுமன்றத்தில் சம்பந்தன் சூழுரைத்து போர்குற்றவாளிகளை பாதுகாத்துவிட்டு செஞ்சோலையில் படுகொலை செய்யப்பட்ட சிறார்களுக்கான நினைவுத் தூபி திறந்து வைப்பதிலும் அதில் பங்குகொள்வதற்கும் இவர்களுக்கு என்ன அருகதையிருக்கின்றது. போர் குற்றவாளிகளை சனாதிபதி தேர்தல் வரை கொண்டு வந்து விட்டதோடு ஐநாவிற்கு வழங்கிய வாக்குறுதிகள் இதுவரை நிறைவேற்றப்படவில்லை என இன்று ரணில் கூறும்வரை எவ்வித அழுத்தமும் அரசாங்கத்திற்கு கொடுக்காமல் வாய்மூடி மௌனியாக இருக்கின்றார்கள்.

ஆகவே இவர்களுடைய ஏமாற்று தனத்திற்கும் பித்தலாட்டத்திற்கும் முற்றுப்புள்ளி வைக்கவேண்டிய காலம் நெருங்கி விட்டது.

ஒரு புதிய அரசியல் கலாசாரத்தை கொண்டுவருவதற்கு புலத்திலும் புலம்பெயர் நாடுகளிலும் இளைஞர்கள், புத்திஜீவிகள், சர்வமத தலைவர்கள் ஒன்றுபட்டு ஒரு பலமான மக்கள் நலன் சார்ந்த ஒரு அரசியல் தலைமையை உருவாக்குவதற்கு நாம் அனைவரும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும்."

இவ்வாறு அந்த அறிக்கையில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

2ம் பக்கத் தொடர்ச்சி

இருக்கிறார். காரணம் இவர்களது காலப்பகுதியில் இந்தியாவின் பாதுகாப்பிற்கு அச்சுறு த்தல் எற்படும் விதமாக சீனாவின் ஆதிக்கம் மிகபெரியளவில் இலங்கையில் அதிகரித்திருந்தது. எனவே அவர் வெற்றி பெற்றால் தமிழர்களிற்கு மாத்திரமல்லாமல் இந்தியாவிற்கும் பாதிப்பை ஏற்படுத்தும். எனவே அவருக்கு எதிராக இந்தியா உட்பட அமெரிக்கா தலைமையிலான மேற்கு நாடுகள் செயற்படும். இது தமிழர்களிற்கு ஒரு வாய்பான சூழல். எனவே இந்த நிலையில் தமிழ் தரப்பு கண்ணை மூடிகொண்டு முட்டாள் தனமாக இருந்து தொடர்ந்தும் ஒரு அழிவுப்பாதைக்கு செல்லாமல் பூகோள அரசியலை புரிந்து கொண்டு காத்திரமான முடிவினை எடுத்து செயற் படவேண்டிய நிலைக்கு தள்ளபட்டுள்ளனர்.

ஐக்கிய தேசிய கட்சி வேட்பாளர் இந்தியாவிற்கும்,மேற்கு நாடுகளிற்கும் சார்ந்த ஒருவராகவே இருப்பார் அதனாலே கூட்டமைப்பும் அவரை ஆதரிக்க போவதாக அறிவித்திருக்கிறது. அப்படிபட்ட ஒருவரை வெற்றி பெறவைப்பதற்கு தமிழர்களின் வாக்குகள் நிச்சயம் தேவை.

தமிழர்களின் வாக்குகள் மூலமாக தான் அவரை வெல்லவைக்க முடியும் என்ற நிலைக்கு இந்தியா தள்ளபடுகின்றபோது,இந்தியாவிடம் தமிழ்மக்கள் ஒரு காத்திரமான பேரம் பேசலை முன்வைக்க வேண்டும், குறிப்பாக இந்தியா தமிழ்தேசத்தை அங்கீகரிக்கவேண்டும் என்ற நிலைப்பாட்டை நிபந்தனையாக முன் வைக்கவேண்டும். எனவே பேரம் பேசுவதற்கு இது ஒரு பொன்னான சந்தர்ப்பம் என மேலும் தெரிவித்தார்.

# கோத்தபாயவின் வெற்றி

## யாருக்கு ஆபத்தானது?

வேல்ஸ் இல் இருந்து அருஷ்

முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற பாரிய இனப்படுகொலை நிறைவடைந்து பத்து ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் நாம் இந்த பத்து வருடங்களில் எந்த நிலையை அடைந்துள்ளோம் என்ற மீள் ஆய்வுகளை தமிழ் மக்களும், அமைப்புக்களும் பல தளங்களில் மேற்கொண்டிருந்தன.



முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற ஆயுத மௌனிப்பின் பின்னர் எமது போராட்டம் வேறு வடிவத்தில் பலம் கொண்டு நகரும் என்ற எதிர்பார்ப்பு தமிழ் மக்களிடம் இருந்தது. ஒரு இனத்தின் பேரழிவு என்பது அந்த இனமக்களை ஒரு அணியில் இணைக்கும் என்பது தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு மட்டுமல்லாது, உலகத்தின் எதிர்பார்ப்பும் அவ்வாறானதாகவே இருந்தது. கிட்லரின் நடவடிக்கைக்கு பின்னர் யூதர்களின் ஒருங்கிணைவும், ஜேர்மனியின் ரஸ்யா நோக்கிய படை நகர்வின் பின்னர் இரும்புத்திரையாக மாறிய சோவியத்து ஒன்றியத்தின் ஒற்றுமையும் வரலாறு எமக்குத் தந்த பாடங்கள்.

ஆனால் நாம் எதிர்பார்த்தது இடம்பெறவில்லை, எதிரியின் எதிர்பார்ப்பே வெற்றிகரமாக நகர்ந்தது. புலம்பெயர் நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட கடந்த 10 ஆண்டுகள் தொடர்பான கலந்துரையாடல்கள் மற்றும் ஆய்வுகளின் முடிவு இது. அதாவது தமிழ் இனம் சிதறிப் போயுள்ளது. புலத்திலும், தாயகத்திலும் அது நிகழ்ந்துள்ளது, அதன் விளைவாக நாம் பலவீனமடைந்துள்ளோம்.

எனவே எதிர்வரும் 10 ஆண்டுகளில் நாம் விரைவாக நகரவேண்டிய கட்டாயம் ஒன்று ஏற்பட்டுள்ளது. அதற்கு தேவை சிறீலங்காவின் தேசிய அரசியலிலும், அனைத்துலக இராஜதந்திர நகர்வுகளிலும் தமிழ் இனம் மேற்கொள்ளும் முடிவுகளும் நகர்வுகளுமே.

இந்த நிலையில் தான் சிறீலங்காவில் நடைபெறவுள்ள அரச தலைவர் தேர்தலில் தமிழ் மக்கள் மேற்கொள்ள வேண்டிய தீர்மானம் முக்கியத்துவம் பெறுகின்றது. ஏனெனில் சிறீலங்காவின் அரசியலில் பூகோள அரசியல் நலன்சார் நாடுகளின் தலையீடுகள் அதிகம்.

இந்த பூகோள அரசியல் சக்திகளின் துணையுடன் சிறீலங்கா அரசு மேற்கொண்ட இனப்படுகொலையில் சிக்கிய தமிழ் இனம் தற்போது அதே வலையமைப்பின் ஊடாகத் தான் வெளிவரவேண்டிய கட்டாயத்தில் உள்ளது. ஏனெனில் போரின் போது மட்டுமல்லாது போரின் பின்னரும் மேற்குலகம் சிறீலங்காவில் தனது ஆதிக்கத்தை செலுத்த முற்பட்டு வருகின்றது. போர் நிறைவடைந்தவுடன் பொன்சேகாவை பயன்படுத்தி மேற்குலகம் ஒரு இராணுவப்புரட்சிக்கு திட்டமிட்டது. ஆனால் அதனை அறிந்த இந்தியா மகிந்தவை காப்பாற்ற தனது இராணுவத்தை நள்ளிரவில் தயார்ப்படுத்தியதால் திட்டம் கைவிடப்பட்டது. சிங்களவர்களின் தலைகள் பல தப்பின.

அதேசமயம், 2010 ஆம் ஆண்டு இடம்பெற்ற அரச தலைவர் தேர்தலில் மகிந்த பெரு வெற்றியீட்டியதுடன், நாடாளுமன்றத்திலும் பெரும்பான்மை பெற்றார்.

அதனைத் தொடர்ந்து 18 ஆவது திருத்தச்சட்டத்தை 2010 ஆம் ஆண்டு ஏப்பிரலில் கொண்டு வந்து எத்தனை தடவை வேண்டுமானாலும் தான் அரச தலைவராக இருக்கலாம் எனவும், சுதந்திரமாக செயற்பட்ட அரச நிறுவனங்களை தனது கட்டுப்பாட்டிலும் கொண்டு வந்தார். பொருளாதார ரீதியாக சீனா தனக்கு பக்கபலமாக இருக்கும் என்பது அவரின் அசையாத நம்பிக்கை. ஆனால் மேற்குலகம் ஓய்ந்துபோகவில்லை 2010 ஆம் ஆண்டில் இருந்து 2015 ஆம் ஆண்டு வரை—யிலுமான காலத்தில் சிறீலங்காவில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பான புகைப்படங்கள், காணொளிகள் என பல தகவல்கள் வெளிவரத் தொடங்கின. ஐக்கிய நாடுகள் மனித உரிமை அமைப்பிலும் அதன் தாக்கம் எதிரொலித்தது. பல தீர்மானங்கள் வந்தன, புகைப்படங்கள் மற்றும் காணொளிகளை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளையும், அதனை வெளிக்கொண்டு வரும் நடவடிக்கைகளையும் மேற்குலக வல்லுனர்களும் ஊடகவியலாளர்களுமே மேற்கொண்டு வந்தனர்.

உதாரணத்திற்கு சனல் 4 தொலைக்கட்சி, பிற்றர் சார்க்ஸ், பிரித்தானியாவை தளமாகக் கொண்ட சன்டே ரைம்ஸ் பத்திரிகையில் பணியாற்றிய காலம் சென்ற அமெரிக்காவைச் சேர்ந்த ஊடகவியலாளர் மேரி கெல்வின் என நாம் இங்கு பலரைக் குறிப்பிடலாம்.

ஊடகப்பிரிவு பணியாளர் இசைப்பிரியா தொடர்பான போர்க்குற்ற ஆதாரங்களையும் சனல் 4 இன் ஆசிய பிரிவு ஊடகவியலாளர் ஜொனார்தன் மில்லர் 2013 ஆம் ஆண்டு வெளிக்கொண்டந்திருந்தார்.

போரின் பின்னரான தேடுதல் மற்றும் துப்பரவு என்ற போர்வையில் சிறீலங்கா படையினர் பரிய அளவிலான படுகொலைகளை மேற்கொண்டதாகவும், அவ்வாறு கொல்லப்பட்டவர்களில் பலர் சரணடைந்தவர்களே எனவும் அனைத்துலக போர்க் குற்றவியல் வழக்கறிஞர் யூலியன் நோவல் தெரிவித்திருந்தார்.

மேலும் ஜி.எஸ்.பி வரிச்சலுகை மீதான தடையை கூட மகிந்தவின் காலத்தில் நீக்க மறுத்த ஐரோப்பிய ஒன்றியம் சிறீலங்காவின் பொருளாதாரத்தை ஒரு தேக்க நிலையில் தான் வைத்திருந்தது.

2015 ஆம் ஆண்டு தேர்தலில் மகிந்தவின் கட்சியை இந்தியாவும், அமெரிக்காவும் இணைந்து உடைத்தன. சிறீசேனா என்ற பகடைக்காய் உருவாக்கப்பட்டார்.

எனினும் தனது சகோதரர்களின் உதவியுடன் இராணுவப்புரட்சி ஒன்றிற்கு மகிந்த தயாரானார். அதற்காக சிறீலங்கா இராணுவத்தின் கஜபா றெஜிமென்ட தயார்படுத்தப்பட்டது. அலரி மாளிகையை விட்டு வெளியேற மறுத்தார். ஆனாலும் அமெரிக்கா விடவில்லை. அப்போது அமெரிக்காவின் வெளிவிவகாரச் செயலாளராக இருந்து ஜோன் ஹெரியிடம் இருந்து வந்த தொலைபேசி மிரட்டலைத் தொடர்ந்து மகிந்தா அலரிமாளிகையை விட்டு வெளியேறினார்.

நல்லாட்சி என்ற போர்வையில் மைத்திரிபால சிறீசேனாவும், ரணிலும் கைகோர்த்தனர். மகிந்தவின் 18 ஆம் திருத்தச்சட்டம் ஒழிக்கப் பட்டது. 19 ஆவது திருத்தச்சட்டம் 2015 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டது.

அதன் மூலம் அரச தலைவரின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டு பிரதமரின் அதிகாரங்கள் அதிகரிக்கப்பட்டன. ஒருவர் இரு தடவைகள் தான் அரச தலைவராக வர முடியும் என்ற சட்டமும் கொண்டுவரப்பட்டது.

இதன் மூலம் முதலில் சீனாவை வெளியேற்றுவது பின்னர் தாம் பங்குபிரிப்பது என்பதே அமெரிக்க — இந்திய கூட்டு முன்னனியின் அன்றைய திட்டம். ஆனால் மகிந்த சீனாவுடன் மேற்கொண்ட 99 ஆண்டு கால அம்பாந்தோட்டைத் துறைமுக ஒப்பந்தம் சீனாவை வெளியேற்ற முடியாது என்ற எண்ணத்தை அவர்களிடம் ஏற்படுத்தியது.

அதற்கு இணையாக திருமலைத்துறைமுகத்தை அமெரிக்கா ரணிலிடம் கோரியது. திருமலைத்துறைமுகத்தை வைத்து சில நன்மைகளை அடைய சிங்களம் திட்டமிட்டது. எனவே அது சிங்களவர்களின் பிரதேசம் என காண்பிப்பதற்கான வேலைத் திட்டங்களை ரணில் அரசு முன்னனெடுத்தது. எனவே கன்னியா நீரூற்று நிலைகளை சிங்களம் ஆக்கிரமித்துக் கொண்டது. ஆனால் இதனை மோப்பம் பிடித்த இந்தியா விழித்துக் கொண்டது.

அமெரிக்காவின் திருமலைத்துறைமுகத் திட்டத்தை தவிர்ப்பதற்கு மீண்டும் மகிந்தவை பயன்படுத்தியது. அதன் தாக்கமே கடந்த ஒக்டோபர் மாதம் இடம்பெற்ற அரசியல் நெருக்கடி. ஆனால் திட்டம் தோல்விகண்டது.

ஒக்டோபர் மாதம் இடம்பெற்ற அரசியல் தோல்வியை சீர் செய்ய இந்தியாவும், தனது படைத்துறை உடன்படிக்கையில் எற்பட்ட பின்னடைவுகளை சீர்செய்வதற்கு அமெரிக்காவும் தற்போது முயற்சிக்கின்றன. எனவே தான் கோத்தபாய மீது அவசரமான வழக்குகள் தொடுக்கப்பட்டன, அவர் குடியுரிமையை இழந்துள்ளதாக அறிவித்துள்ள போதும், அமெரிக்க உள்நாட்டு வருவாய் சேவை திணைக்களம் அதனை உறுதிப்படுத்தவில்லை. ஆனாலும் அவர் போட்டியில் குதித்துள்ளார்.

கோத்தபாயா வெற்றியீட்டினால் அமெரிக்கா முதலில் நட்புக் கரத்தை நீட்டும், அதற்கான முன்முயற்சியாகவே அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் இராஜதந்திரிகள் மகிந்தவைச் சந்தித்துள்ளனர். அமெரிக்காவின் இந்த முயற்சி தோல்வியில் முடிந்தால்?

போர்க்குற்ற ஆதாரங்களுடன் மேற்குலகம் களம் இறங்கும். கோத்தபாயவை அடிபணிய



வைப்பதற்கோ அல்லது தண்டிப்பதற்கோ அவர்களிடம் ஏராளமான ஆதாரங்கள் உள்ளன.

அனைத்துலக மன்னிப்புச்சபை, அனைத்துலக மனித உரிமைகள் கண்காணிப்பகம், அனைத்துலக நெருக்கடிகளுக்கான அமைப்பு, அனைத்துலக எல்டேர்ஸ் அமைப்பு, ஐக்கிய நாடுகள் சபை, ஐ.நா மனித உரிமைகள் அமைப்பு என பல அமைப்புகள் மேற்குலகம் சார்பானவை. அவர்களை புறம்தள்ள சிறீலங்காவால் முடியாது.

எனவே பொருளாதாரத் தடையை ஏற்படுத்தவோ அல்லது போர்க்குற்றவாளிகளாக இனங்காணப்பட்டவர்கள் மீது பயணத்தடை விதிக்கவோ அவர்களால் முடியும். சீனா அல்லது ரஸ்யா தமது வீட்டோ அதிகாரம் மூலம் அதனை தடுக்கலாம் எனினும் அது சந்தேகமே ஏனெனில் முன்னாள் யூகோஸ்லாவாக்கிய அதிபரின் விடயத்தில் அவர்கள் அதனை பயன்படுத்தவில்லை.

அதற்கான காரணம் போர்க்குற்றம், சனநாயக விழுமியங்களை மீறும் செயற்பாடுகள் என வைக்கப்படும் சான்றுகளின் மீது பிரயோகிக்கப்படும் வீட்டோ அதிகாரம் அந்த நாடுகளின் நன்மதிப்பை குறைத்துவிடும்.

சரி அவ்வாறு அவர்கள் பயன்படுத்தி சிறீலங்காவைக் காப்பாற்றினாலும் அது அமெரிக்காவை மேலும் சீற்றம் கொள்ளவே செய்யும். எனவே கோத்தபாயவின் வெற்றி என்பது பல திருப்பங்களுக்கு வழிவகுக்கும் என்பதுடன் சிங்கள மக்களுக்கு அனுகூலமானதல்ல.

# தனிச்சிங்கள வாக்குகள் எதிர் மூவின வாக்குகள்?

**நிலாந்தன்**

சில வாரங்களுக்கு முன்பு டான் டிவியின் அதிபர் குகநாதன் முகநூலில் பின்வருமாறு ஒரு குறிப்பை எழுதி இருந்தார்...

“சிங்கள மக்கள் தெரிவு செய்யப் போகும் அடுத்த சனாதிபதி!

சிறுபான்மையினரின் வாக்குகள் இல்லாமல் யாரும் சனாதிபதி தேர்தலில் வெற்றி பெற முடியாது என்று பலரும் எழுதி வருகின்றனர். ஒரு சின்னக் கணக்கு.

**பதிவு செய்யப்பட்ட மொத்த வாக்காளர் 15,992,096.**

**வாக்களிப்பவர்கள் அதிகபட்சம் 80 வீதம் 12,793,676.**

**வெற்றிபெறத் தேவையானது 6,396,839.**

**தனிச்சிங்கள் வாக்காளர்கள் 11,302,393.**

**அவர்களில் வாக்களிப்பவர்கள் 80 வீதம் 9,041,914.**

**இந்த வாக்குகளில் 70.74 வீதம் 6,396,839.**

ஆக சிங்கள மக்களின் வாக்குகளில் 70.74 வீத வாக்குகளைப் பெறுகின்ற ஒருவரால் சிறுபான்மையினர் வாக்குகள் ஒன்று கூட இல்லாமல் சனாதிபதி ஆகிவிட முடியும்.இந்தத் தேர்தலிலும் சிறுபான்மையினர் வாக்குகள் சனாதிபதியை தீர்மானிப்பதை பெரும்பான்மையான சிங்கள மக்கள் விரும்பவில்லை என்று தெரிகின்றது. பொறுத்திருந்து பார்ப்போம்!”

குகநாதனின் கணக்கில் ஒரு தர்க்கம் உண்டு. 2015ஆம் ஆண்டு தேர்தல் முடிவுகளை இலங்கை வரைபடத்தில் நிறந்தீட்டிப் பார்த்தால் ஒரு விடயம் தெளிவாகத் தெரியவரும். மைத்திரிபால சிறிசேனவின் கூட்டு எதிரணி தமிழ் பகுதிகளில்தான் பெருமளவு வெற்றி பெற்றது. அதேசமயம் சிங்களப் பகுதிகளில் அக்கூட்டு எதிரணி கொழும்பு, கண்டி,கம்பகா திகாமடுல்ல ஆகிய பகுதிகளில்தான் வெற்றி பெற்றிருக்கிறது. மஹிந்த 47.58 வீத வாக்குகளைப் பெற்றார். மைத்திரிபால சிறிசேன 51.28 விகிதத்தை பெற்றார். அதாவது மஹிந்த 3.07 விகித வாக்குகளால் தோல்வியுற்றார். இது ஓர் அரும்பொட்டு வெற்றி இந்த வெற்றிக்கு பெருமளவு காரணம் தமிழ் முஸ்லிம் மலையக வாக்குகளே.

அதே ஆண்டு ஒகஸ்ற் மாதம் நிகழ்ந்த நாடாளுமன்றத்திற்கான பொதுத் தேர்தலில் சிங்கள மக்கள் மத்தியில் மாற்றத்தின் அலை ஒன்று வீசியது. எனினும் நல்லாட்சிக்கான ரணில்—மைத்திரி கூட்டுக்கு கிடைத்தது 45.66 விகிதமாகும். மகிந்த ராஜபக்ஷ அணிக்கு கிடைத்தது 42.38 விகிதமாகும். அதாவது 3.28 விகித வேறுபாட்டில் ரணில் மைத்திரி அணி வெற்றி பெற்றது. சனாதிபதி தேர்தலுக்குப் பின் ஒரு வெற்றி அலை வீசிய போதிலும் மகிந்த அணிக்கும் ரணில் மைத்திரி அணிக்கும் இடையிலான வாக்கு விகித வித்தியாசம் எனப்படுவது 3.28 விகிதம்தான்.

அதன் பின் நிகழ்ந்த கூட்டுறவு சபைகளுக்கான தேர்தலில் ராஜபக்ச அணி பெருவெற்றி பெற்றது. அந்த வெற்றியைப் கண்டு அஞ்சியே ரணில் – மைத்திரி அரசாங்கம் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களை ஒத்திவைத்தது. முடிவில் கடந்த ஆண்டு தேர்தல்களை நடாத்தியது. அத்தேர்தலில் ராஜபக்ச அணி தாமரை மொட்டுச் சின்னத்தின் கீழ் பொது ஜன பெரமுன என்ற கட்சியாக போட்டியிட்டு பெருவெற்றி பெற்றது. அந்த வெற்றிதான் மைத்திரியைக் குழப்பியது. அதன் விளைவே கடந்த ஒக்டோபர் மாதம் நிகழ்ந்த ஆட்சிக் குழப்பம் ஆகும்.

பொது ஜன பெரமுன எனப்படுவது யுத்த வெற்றியின் குழந்தை. யுத்த வெற்றியை நிறுவன மயப்படுத்தி அதைக் கட்டிறுக்கமான ஒரு கட்சியாக மகிந்த கட்டி எழுப்பியுள்ளார். மகிந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பாரம்பரியத்தில் வந்தவர். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைக் கட்டி எழுப்பியதில் ராஜபக்ஷக்களுக்கு பெரிய பங்கு உண்டு. எனினும் சந்திரிக்காவின் கண்டிச் சிங்கள மேட்டுக்குடி வம்சத்துக்கு நிகராக நின்று பிடிப்பதில் ராஜபக்சக்களுக்கு அடிப்படையான சவால்கள் முன்பு இருந்தன. ஆனால் யுத்த வெற்றியின் மூலம் தனக்கு முன்பு ஆட்சி செய்த மேட்டுக்குடி கண்டிச் சிங்கள வம்சங்கள் எதனாலும் முடியாத ஒன்றை ராஜபக்ச சாதித்துக் காட்டினார்.

வெல்ல முடியாது ஓர் அமைப்பு என்று நம்பப்பட்ட புலிகள் இயக்கத்தை அவர் தோற்கடித்தார். அதன்மூலம் தனக்கு முன்பு ஆட்சி செய்த கண்டிச் சிங்கள மேட்டுக்குடிகளுக்கு எதிராகத் தன்னை தோற்கடிக்கப்பட முடியாத ஒருவராக ஸ்தாபித்தார். பண்டாரநாயக்காக்களின் கட்சியாகக் காணப்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் தனது முதன்மையை ஸ்தாபிப்பதை விடவும் தனது யுத்த வெற்றிகளையே ஒரு கட்சியாகக் கட்டியெழுப்புவது என்று அவர் முடிவெடுத்தார். அப்படி முடிவெடுத்துக் கட்டி எழுப்பப்பட்டதே தாமரை மொட்டுக் கட்சியான பொது ஜன பெரமுன. இதன் மூலம் ராஜபக்சக்கள் யுத்த வெற்றியைத் தமது குடும்பச் சொத்தாக்கி அதை நிறுவனமயப்படுத்தியும் விட்டார்கள்.



“கடந்த உளூராட்சி மன்றத் தேர்தலில் இக்கட்சி ஐந்து மில்லியன் வாக்குகளைப் பெற்றது. ஆசியாவிலேயே சீனக் கொம்மியூனிஸ்ட் கட்சிக்கு அடுத்த படியாக இரண்டாவது பெரிய கட்சி அதுவென்றும் டிஜிட்டல் தளங்களிலில் அது பெரிய செல்வாக்கைச் செலுத்துகின்றது என்றும்” சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் எஸ்.பி.திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

மேற்கண்டவை அனைத்தையும் தொகுத்துப் பார்த்தால் ஒன்று தெளிவாகத் தெரியவரும் 2009 இல் இருந்து மஹிந்ததான் சிங்கள—பௌத்த பெருந் தேசிய வாதத்தின் கேள்விக்கிடமற்ற தலைவராக காணப்படுகிறார். 2015இல் அவரைத் தோற்கடித்தது தமிழ் முஸ்லிம் வாக்குகள்தான். சிங்கள பௌத்த பெருந்தேசிய வாதத்தை பொறுத்தவரை மஹிந்த தான் அதன் தலைவர்.

2015இல் மைத்திரி கட்சியை இரண்டாக உடைத்தார். அதுதான் மஹிந்தவின் தோல்விக்கான வழிகளைத் திறந்துவிட்டது. ஆனால் 2015இலிருந்து தொடர்ச்சியாக நடந்த எல்லா தேர்தல்களிலும் மஹிந்ததான் சிங்கள பௌத்த தேசியவாதத்தின் இதயத்தில் அமர்ந்து இருக்கிறார் என்ற செய்தி தேர்தல் முடிவுகளில் வெளிப்பட்டது.

இப்பொழுது மகிந்த யுத்த வெற்றி வாதத்தை நன்கு நிறுவன மயப்படுத்தி அதை ஒரு கட்சியாகக் கட்டி எழுப்பி விட்டார். பிளவுண்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பெருந்துண்டு மகிந்தவிடம் சென்று விட்டது. அக் கட்சியின் சிதைவின் மீது பொது ஜன பெரமுன கட்டியெழுப்பப்படுகிறது. பொது ஜன பெரமுனவின் சனாதிபதி வேட்பாளராக யுத்த வெற்றி நாயகர்களில் ஒருவரான கோத்தபாயவை அறிவிக்கப்பட்ருக்கிறார்.

யுத்த வெற்றி வாதம் எனப்படுவது 2009 க்குப் பின்னரான சிங்கள பௌத்த பெருந்தேசிய வாதத்தின் ஆகப் பிந்திய வளர்ச்சிதான். எனவே யுத்த வெற்றி வாதத்தை ஒரு கட்சியாகக் கட்டியெழுப்பியதன் மூலம் சிங்கள பௌத்த பெருந்தேசிய வாக்;குகளை அப்படியே கொத்தாக அள்ளியெடுக்க ராஜபக்ச சகோதரர்கள் திட்டமிடுகிறார்கள். இவ்வாறு ராஜபக்ச சகோதரர்கள் தனிச் சிங்கள வாக்குகளை இலக்கு வைத்து தமது வியூகத்தை வகுக்கும் வகுத்திருக்கும் ஒரு பின்னணியில் ரணில் விக்கிரமசிங்க என்ன செய்யப் போகிறார்?



அவர் இன்னமும் வேட்பாளரை அறிவிக்க வில்லை. அந்த அறிவிப்பை காலம் தாழ்த்துவதன் மூலம் சஜித்தின் ஆதரவாளர்களை எப்படிச் சமாளிக்கலாம் என்று அவர் சிந்திக்கிறார். கட்சித் தலைமையை அவர் வேறு யாரிடமாவது கையளிக்கத் தயாரா?

அவருடைய தரப்பு வேட்பாளர் யாராகவும் இருக்கலாம் ஆனால் அந்த வேட்பாளர் மூவின வாக்குகளை திரட்டும் ஒருவராக இருக்கவேண்டும். ஆனால் அவ்வாறு மூவின வாக்குகளைத் திரட்டப்போகும் வேட்பாளருக்குப் பின்வரும் சவால்கள் உண்டு. முதலாவது சவால் —

தொடர்ச்சி 7ம் பக்கம்

**2ம் பக்கத் தொடர்ச்சி**

ஈஸ்டர் குண்டு வெடிப்புக்குப் பின் ஒரு பகுதி சிங்களப் பொதுக் கூட்டு உளவியல் எனப்படுவது உறுதியான ஒரு தலைமைத் துவத்தை கோரத் தொடங்கிவிட்டது. அப்படி ஓர் உறுதியான தலைமை யுத்த வெற்றி வாதிகள் மத்தியில்தான் உண்டு. லிபரல் ஜனநாயக முகமூடி அணிந்த சிங்கள பௌத்த பெருந்தேசிய வாதிகள் மத்தியில் உண்டா?

இரண்டாவது சவால் — ஒரு புதிய மாற்றத்தை அல்லது பெருந்திருப்பத்தை ஏற்படுத்தத் தேவையான ஒரு புத்துணர்ச்சி மிக்க கூட்டு உளவியலைக் கட்டியெழுப்ப வல்ல ஆளுமை மிக்க தலைவர்கள் எவரும் அந்த அணியிடம் இல்லை. 2015இல் மைத்திரிபால சிறிசேன அப்படி ஒரு வேட்பாளர் போல தோன்றினார். அப்பொழுதும் கூட அவருடைய அமைச்சின் கீழ் வேலை செய்த சில தமிழ் மருத்துவர்கள் சொன்னார்கள்... அவர் காட்டும் லிபரல் ஜனநாயக முகம் ஒரு முகமூடி என்று. தென்னிலங்கையில் நடந்த ஒரு கருத்தரங்கில் உரைகள் யாவும் சிங்களத்தில் அமைந்திருந்த பொழுது அதைச் சுட்டிக்காட்டிய தமிழ் மருத்துவர்களிடம் நீங்கள் சிங்களம் பழகுங்கள் என்று அவர் கூறியதாகத் தகவல் உண்டு.

இப்பொழுது மைத்திரியின் முகமூடி கிழிந்து விட்டது. இனி அவரைப் போல யாரைக் கொண்டு வந்தாலும் அது முகமூடியா நிஜமா என்று தமிழ் மக்கள் சந்தேகிப்பார்கள். முஸ்லிம் மக்களும் சந்தேகிப்பார்கள். ஏன் மைத்திரி வாக்களித்த சிங்கள மக்களும் சந்தேகிப்பார்கள். அதாவது மாற்றத்தை குறித்து புத்துணர்ச்சி மிக்க எதிர்பார்ப்புக்களும் நம்பிக்கைகளும் நாட்டில் இப்பொழுது இல்லை. இது ரணில் அணிக்குப் பாதகமான அம்சம். மூன்றாவது சவால் — 2015இல் பிளக்கப்பட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியானது இப்பொழுது பெருமளவுக்கு மீள இணைக்கப்பட்டு அதில் பெரும்பகுதி மகிந்தவோடு நிற்கிறது. சிறு துண்டு மைத்திரியோடு நிற்கிறது. நாலாவது சவால் — தமிழ் மக்களின் கூட்டுக் உளவியல் 2015ல் காணப்பட்டதை போல இப்பொழுது இல்லை. கூட்டமைப்பின் மீதும் ரணிலின் மீதும் அதிருப்தியும் கோபமும் அதிகரித்துக் காணப்படுகின்றன. கம்பெரலிய துரித அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் திருத்தப்பட்ட விதிகள் மைதானங்கள் கட்டப்பட்ட கட்டிடங்கள் எல்லாவற்றையும் மேவிக்கொண்டு நாவற்குழியில் கட்டப்பட்டு வரும் விகாரை தெரிகிறது, கன்னியா தெரிகிறது. பழைய செம்மலை தெரிகிறது. எனவே தமிழ் மக்களின் கூட்டுக் உளவியலை ராஜபக்சவுக்கு எதிராக திரட்டுவது என்ற ஓர் உத்தியில் மட்டுமே கூட்டமைப்பும் ரணிலும் தொங்க வேண்டி இருக்கும்.

ஐந்தாவது சவால் — முஸ்லிம் வாக்குகள். ஈஸ்டர் குண்டுவெடிப்பின் பின் முஸ்லிம் சமூகம் பெருமளவிற்கு தற்காப்பு நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டது. வெல்ல முடியாத பேரினவாதத்தோடு மோதுவதை விடவும் அதோடு சுதாகரித்துக் கொள்ளலாம் என்று ஒரு தரப்பு முஸ்லிம்கள் யோசிக்கிறார்கள். சில நாட்களுக்கு முன்பு முன்னாள் கிழக்கு முதலமைச்சர் ஆற்றிய உரையில் வெற்றி பெறும் தரப்பு எது என்று பார்த்துத் தாம் முடிவெடுக்க போவதாக தெரிவித்திருக்கிறார். ஆனால் 2015இல் மாற்றத்துக்காக விழுந்த வாக்குகளில் முஸ்லிம்களின் வாக்குகளும் கணிசமானவை. முஸ்லிம் கூட்டுக் உளவியல் 2015இல் காணப்பட்டதை போல இப்பொழுதும் காணப்படுகிறதா?

ஆறாவது சவால் — 2015இல் ஆட்சி மாற்றத்திற்காக ஒரு பகுதி மனித உரிமைச் செயற்பாட்டாளர்களும் லிபரல் ஜனநாயக வாதிகளும் பல்கலைக்கழக புத்திஜீவிகளும் கருத்துருவாக்கிகளும் படைப்பாளிகளும் மத குருக்களும் தென்னிலங்கையில் ஒரு கூட்டாகத் திரண்டு வேலை செய்தார்கள. ஆனால் இம்முறை அப்படி மாற்றத்தை குறித்த ஓர் அலையை உருவாக்குவது யார்? அக்காலகட்டத்தில் அரசியல்வாதிகள் மீதும் வாக்காளர்கள் மீதும் தார்மீகத் தலையீட்டை மேற்கொள்ளவல்ல சோபித தேரர் போன்றவர்கள் இருந்தார்கள். ஆனால் இப்பொழுது சோபித தேரர் இல்லை.

இருப்பதெல்லாம் ஞானசார தேரர்களும் ரத்தின தேரர்களும்தான.இதுவோர் எதிர் மறை வளர்ச்சி. எனவே மேற்கண்ட அனைத்தையும் தொகுத்துப் பார்த்தால் ராஜபக்ச அணியின் யுத்த வெற்றி வாதத்திற்கு எதிராக நின்று பிடிக்கக்கூடிய ஒரு வேட்பாளருக்குப் பாதகமான அம்சங்களே அதிகம் உண்டு. இப்பாதகமான அம்சங்களை எதிர்கொண்டு மூவினத்து வாக்குகளைக் கொத்தாகத் திரட்டக் கூடிய ஒரு வேட்பாளர் யார்?

## எத்தனை விகாரைகளுக்கு ஏறி இறங்கினாலும் கோத்தபாயவின் பாவங்கள் ஒருபோதும் மன்னிக்கப்பட மாட்டாது

**ராஜித கருத்து**



சிறீலங்கா பொதுஜன பெரமுன வேட்பாளராக கோத்தபாய ராஜபக்ச அறிவிக்கப்பட்ட நாளி லிருந்து அவர் பௌத்த விகாரைகள் மற்றும் இந்து ஆலயங்களுக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டு வருகின்றார். எத்தனை விகாரைகள், ஆலயங்கள் ஏறி இறங்கினாலும் அவர் செய்த பாவங்களுக்கு ஒருபோதும் மன்னிப்புக் கிடையாது. ஏதோவொரு விதத்தில் அவருக்குத் தண்டனை கிடைத்தே தீரும் — இவ்வாறு அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் பெரிய குற்றச்சாட்டுக்களைத் சுமந்து நிற்கும் கோத்தபாயவை வெட்கம் இல்லாமல் சனாதிபதி வேட்பாளாராக மஹிந்த களமிறக் கியுள்ளார். சனாதிபதி வேட்பாளராகப் போட்டியிட ராஜபக்ச குடும் பத்தில் எவருக்கும் தகுதியில்லை. அந்த முழுக் குடும்பம் மீதும் குற்றச்சாட்டுக்கள் உள்ளன.

மஹிந்த ராஜபக்ச தலைமையிலான சர்வாதிகார ஆட்சியில்தான் மேற்படிக் குற்றங்களை ராஜபக்ச குடும்பம் புரிந்துள்ளது. எனவே, கடந்த தடவை நடைபெற்ற சனாதிபதித் தேர்தலில் மஹிந்தராஜபக்ச தோல்வியடைந்தது போல் இம்முறை நடைபெறவுள்ள சனாதிபதித் தேர்தலில் அவரின் சகோதரர் கோத்தபாய ராஜபக்சவும் தோல்வியடைவார் என்பது உறுதி. வெற்றிவாகை சூடப்போகின்ற ஐக்கிய தேசியக் கட்சியின் சனாதிபதி வேட்பாளர் யார் என்று விரைவில் அறிவிக்கப்படும் — என்றார்.

## எனது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்

**கோத்தபாய**

தனது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இருப்பதாக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாயராஜபக்ச, சனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் முறையிட்டுள்ளார். தனது பாதுகாப்பு அதிகாரிகள் மூலம் கிடைத்த பாதுகாப்பு தொடர்பான தகவல்களை சனாதிபதியிடம் பகிர்ந்துகொண்ட கோத்தபாய பய, இதுகுறித்து கவனம் செலுத்துமாறு கேட்டுள்ளார். கோத்தபாயவின் தகவல்களை யடுத்து அது தொடர்பில் முழு விசாரணை நடத்த அரச புலனாய்வுத் துறையினருக்கு சனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இந்த விசாரணைக்கு இராணுவ புலனாய்வுத் துறையையும் ஒத்துழைக்கக் கேட்கப்பட்டுள்ளது. இதற்கிடையில் கோத்தபாயராஜபக்ச சனாதிபதித் தேர்தல் பிரசாரத்துக்குச் செல்லும்போது கூடுதல் பாதுகாப்பை வழங்குமாறு சனாதிபதி, பாதுகாப்புச் செயலருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார் எனக் கூறப்படுகின்றது.

## சிறீலங்காவிலிருந்து அவுஸ்ரேலியாவுக்குச் செல்ல முற்பட்ட 13 பேர் கைது

சிலாபத்திலிருந்து, அவுஸ்ரேலியாவுக்கு தப்பிச் செல்ல முற்பட்டவர்களே இன்று (ஞாயிற்றுக்கிழமை) கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிலாபம், அம்பகந்தவில் பகுதியிலிருந்து படகு மூலம் அவுஸ்ரேலியாவுக்கு சிலர் தப்பிச்செல்ல முற்பட்டதாக கடந்த சில நாட்களுக்கு முன்னர் சிறீலங்கா கடற்படையின் புலனாய்வுப் பிரிவுக்கு இரகசியத் தகவல் கிடைத்துள்ளது.

இதனையடுத்து கடற்படையினர் இந்த விடயம் தொடர்பாக விசாரணைகளை ஆரம்பித்திருந்த நிலையில், நேற்று நள்ளிரவில் குறித்த தரப்பினர் சிறிய ரக லொறி ஒன்றின் ஊடாக கடற்கரையை நோக்கி பயணிக்கை—யிலேயே கைது செய்யப்பட்டுள்ளனர். கரைவலைத் தொழிலுக்காக இரணவில பிரதேசத்திற்கு சென்று அங்கு தொழில் இல்லாத காரணத்தால் மீண்டும் திரும்பிச் செல்வதாக கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள், காவல்துறை—யிடம் இதன்போது தெரிவித்துள்ளனர். எனினும், அவர்கள் அம்பகந்தவில பிரதேசத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்னர் சென்று தங்கியிருந்தமை விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களுள் பத்து பேர், மட்டக்களப்பு பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் இருவர் தொடுவாய் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவித்துள்ள காவல்துறையினர், குறித்த 13 பேரும் 19 வயதுக்கும் 61 வயதுக்கும் இடைப் பட்டவர்கள் என்றும் குறிப்பிட்டனர்.

மேலும், கைது செய்யப்பட்டவர்களிடம் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் விசாரணையின் பின்னர் சந்தேகநபர்களை சிலாபம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளதாகவும் காவல்துறையினர் தெரிவித்தனர்.

## படையினருக்கான பொறுப்புக்கள் வரையறையின்றி நிறைவேற்றப்படும் - சஜித்

முப்பது வருட கால யுத்தத்ததை முடிவுக்கு கொண்டுவந்து நாட்டை மீட்டெடுத்த படை யினருக்கும், அவர்களது குடும்பங்களுக்கும் எந்தவித வரையறைகளும் இன்றி பொறுப்புக்கள் நிறைவேற்றப்படுமென்று அமைச்சர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். ஆனமடுவ பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வின் போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். படை—யினரின்சேமநலத்திற்காக தற்போதைய அரசாங்கம் பாரிய பணிகளை நிறை வேற்றியுள்ளது. இதற்கான வேலைத்திட்டங்களை மேலும் வலுப்படுத்தி தொடர்ந்தும் முன்னெடுப் பதற்காக புதிய நடைமுறைகளை அரசாங்கம் மேற்கொள்ளும் என்றும் அவர் கூறினார். படையினருக்கான உதாகம திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# செஞ்சோலைகளை தடுத்திருந்தால் முள்ளிவாய்க்கால்கள் நிகழ்ந்திராது

**ஆவணி 14 செஞ்சோலை மாணவர் இனப்படுகொலை தினத்தை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**

ஈழத் தமிழர்களின் வரலாற்றில் செஞ்சோலை மாணவர் படுகொலை மறக்க முடியாத வடுவாகியுள்ளது. ஓகஸ்ட் 14. 2006 ஆம் ஆண்டு செஞ்சோலை படுகொலையை சிங்கள அரசு நிகழ்த்தியது. உண்மையில் செஞ்சோலைப் படுகொலைகளை உலகம் தடுத்திருந்தால் முள்ளிவாய்க்கால் இனப் படுகொலைகள் நிகழ்ந்திராது. செஞ்சோலைப்படுகொலை என்பது பாரிய இனப்படுகொலைக்கான சிங்கள அரசின் உத்திகையாகும்.

அந்த நாளே ஒரு இருண்ட யுகத்தின் நினைவுகள் போலத்தான் இருக்கின்றன. 2006 ஓகஸ்ட் 11ஆம் திகதி சிங்கள அரசு வடக்கிற்கான பாதையை மூடி வடக்கை தனியொரு நாடாக துண்டித்து வலிந்த போரைத் தொடங்கியது. யாழ்ப்பாண மக்கள் பசியிலும் இருட்டிலும் துடித்த நாட்கள். சமாதான ஒப்பந்தம் நடைமுறை—யிலிருந்த காலம். ஏற்கனவே அவ்வப்போது, விடுதலைப் புலிகளின் நிலைகளை தாக்குவதாக சொல்லிக் கொண்டு வடக்கிலும் கிழக்கிலும் விமானததாக்குதல்களை சிங்கள அரசின் விமானப்படைகள் மேற்கொண்டு வந்தன.

போர் நிறுத்த ஒப்பந்தம் அமுலில் இருந்தபோதும், விமானத்தாக்குதல்கள் பாடசாலைகளை அண்டியும் வீடுகள்மீதும் நடந்தன. எல்லாம் புலிகளின் முகாம்கள் என்றே அரசால் கூறப்பட்டது. இதனை வெறுமே பதிவு செய்து கொண்டிருந்தது போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு. தாம் இத்தகைய தாக்குதல்களை நடத்தினாலும் சர்வதேசத்தினாலும், போர் நிறுத்தக் கண்காணிப்பு குழுவினாலும் எதுவும் செய்ய முடியாது என்ற தைரியம் சிங்கள அரசுக்கு ஏற்பட்டது. இதனால் ஒன்றல்ல இரண்டல்ல, 53 மாணவிகளை கொன்று கின்னஸ் சாதனை பதிக்கும் முயற்சியில் சிங்கள அரசு ஈடுபட்டு வெற்றி பெற்றது. உலகிலேயே ஒரே தடவையில் அதிக பெண்கள் கொல்லப்பட்ட கொடூரச் செயல் செஞ்சோலைப் படுகொலையாகும். உலகிலேயே அதிக மாணவிகள் கொல்லப்பட்ட கொடூரச் செயல் செஞ்சோலைப் படுகொலையாகும். உலகிலேயே அதிக சிறுவர்கள் கொல்லப்பட்ட மனித விரோதச் செயல் செஞ்சோலைப்படுகொலையாகும்.

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கு, வலயக் கல்வி அலுவலகம் ஊடாக உரிய அனுமதி பெறப்பட்டு, தலைமைத்து அனர்த்த முகாமைத்துவப் பயிற்சி நடத்தப்பட்டது. இப் பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பள்ளி மாணவர்கள் மீதுதான் சிங்கள அரசின் இன அழிப்பு விமானங்கள் தாக்குதல்களை நடாத்தினர். இதில் சுமார் 50 மாணவிகள் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். அத்துடன் சில மாணவிகள் வவுனியா வைத்தியசாலைக்கும் கண்டி வைத்தியசாலைக்கும் கொண்டு செல்லப் பட்டார்கள். கண்டி வைத்திய சாலையில் அனுமதிக் கப்பட்ட மாணவியை அச்சுறுத்தி, அவரிடம் பொய்யான வாக்குமூலங்களை பெற்றது சிங்கள அரச ஊடகம். இறுதியில் அந்த மாணவியையும் அங்கு வைத்து கொன்றது. இந்த தாக்குதல் குறித்து அப்போதைய சனாதிபதி, தமிழ் இனப்படுகொலை மகிந்த ராஜபக்ச அன்றே வெளிநாட்டில் இருந்து என்ன கூறினார் தெரியுமா? செஞ்சோலையில் ஐம்பதிற்கும் மேற்பட்ட மாணவிகள் கொல்லப்பட்டுள்ளனர். இது குறித்து என்ன சொல்கிறீர்கள் என்று ஒரு சர்வதேச ஊடகவியலாளர் மகிந்த ராஜபக்சவிடம் கேட்டார். அதற்குப் பதில் அளித்த மகிந்த ராஜபக்ச, அவர்கள் புலிகள், அவர்கள் பயங்கரவாதிகள், அத் தாக்குதல் எனக்கு நூறு வீத திருப்தியை தருகின்றது. நாங்கள் பயங்கரவாதிகளைத்தான் அழித்து வருகிறோம்.. என்று கூறினார். அந்தப் பிஞ்சு முகங்களை பார்த்து, மாணவிகளைப் பார்த்து மகிந்த ராஜபக்ச கூறினார் பயங்கரவாதிகள்



தீபச்செல்வன்

என்று, புலிகள் என்று. போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு மற்றும் ஐ.நா அதிகாரிகள் இந்த விடயம் தொடர்பில் ஆராய்ந்தனர். அவர்கள் பாடசாலை மாணவர்கள் என்றும் தலைமைத்துவ பயிற்சிக்காக ஒன்றிணைந்தபோது அரச விமானங்கள் தாக்கி கொல்லப்பட்டனர் என்பதையும் பதிவு செய்தார்கள்.

இப்படுகொலை நடைபெற்று, ஓராண்டு. தமிழீழத் தேசியத் தொலைக்காட்சிக்காக ஒரு ஆவணப்படத்தை தயாரிப்பதற்காக அந்த மாணவிகளின் வீடுகளுக்குச் சென்றேன். அவர்களின் பெற்றோர்கள் உறவினர்கள், நண்பர்களை சந்தித்தேன். பாடசாலை அதிபர்களிலிருந்து ஆசிரியர்களிலிருந்து காயப்பட்ட மாணவர்கள்வரை அந்த அதிர்ச்சியில் இருந்து மீள முடியாதிருந்தனர். காலில் பெரும் காயத்தை அடைந்த மாணவி ஒருவர் பேசமுடியால் அழுத காட்சி இப்போதும் பெருவலி தருகின்றது. அவரும் முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்டார்.

அப் படுகொலை குறித்த ஆவணப்படத்தில் வாக்குமூலம் அளித்த மூன்று மாணவிகள் முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்டார்கள். 53 மாணவிகளும் நன்றாக படிக்கக்கூடியவர்கள். சமூகத்தில் உயர்ந்த நிலையில் இருக்க கூடியவர்கள். இன்றிருந்தால், வைத்தியர்களாக, பொறியர்களாக, ஆசிரியர்களாக, தலைவர்களாக நம் சமூகத்திற்கு தொண்டாற்றியிருப்பார்கள். இந்த சமூகத்தை நடத்தியிருப்பார்கள். அவர்களை அழிப்பதும் இல்லாமல் செய்வதும்தான் சிங்கள அரசின் வேலை என்பதைத்தான் இப்படுகொலையும் உணர்த்துகின்றது.

கல்வி உரிமைக்காகபோராடினோம். வேலை வாய்ப்புக்காக போராடினோம். ஆனால் சிங்கள அரசோ எமது மாணவர்களை பள்ளிக்கூடங்களில் வைத்தே படுகொலை செய்தது. சந்திரிக்கா அரசு நாகர் கோவில் பாடசாலையில் விமானத்தாக்குதல் நடத்தியதில் 39 மாணவச் சிறுவர்கள் கொல்லப்பட்டார்கள். மகிந்த அரசு சமாதான ஒப்பந்தத்தை நடைமுறையில் வைத்துக் கொண்டு 53 மாணவிகளைப் படுகொலை செய்தது. இது குறித்து சர்வதேச சமூகம் எந்த கண்டனங்களையும் விடுக்கவில்லை. அப்படியிருந்தால் கொத்துக் கொத்தாக மாணவர்களையும் மக்களையும் முள்ளிவாய்க்காலில் இனப்படுகொலை செய்யும் துணிவு சிங்கள அரசுக்கு வருமல்லவா?

செஞ்சோலைத்தாக்குதலில் காயமடைந்த மாணவி ஒருவர் இப்போது, ஆசிரியராக கடமையாற்றுகிறார். ஏப்ரல் 21 தாக்குதல்களின் பின்னர் பாடசாலை மாணவர்களை பாதுகாக்கும் புனிதர்களாக அவதாரம் எடுக்க சிங்கள இராணுவத்தினர் முயற்சித்தனர். பாடசாலை வாசல்களில் அவர்கள் பாதுகாப்பு என்ற பெயரில் ஆக்கிரமித்தனர். அவர்களை தாண்டி, அவர்களின் விசாரணைகளைத் தாண்டி வருவதற்கு அந்த ஆசிரியர் கடுமையாக தயங்கினார். அஞ்சினார். பத்து ஆண்டுகள் கடந்து, பன்னிரண்டு ஆண்டுகள் கடந்தும் அந்த தாக்குதலின் வடு இன்னும் நீங்கவில்லை.

இன்று செஞ்சோலைப் படுகொலை நினைவேந்தல் நிகழ்வு தமிழீழத்திலும் புலம்பெயர் நாடுகளிலும் முன்னெடுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக டிஜிட்டல் உலகத்தில் அதாவது இணைய ஊடகத்தில் செஞ்சோலைப் படுகொலை நினைவேந்தல் வலுவாக இடம்பெற்றுள்ளது. இன்றைய இளைய தலைமுறை இளைஞர்கள், யுவதிகள், சிறுவர்கள் இதில் பெரும் அக்கறை கொண்டு ஈடுபடுகின்றனர். என்றாவது ஒருநாள் சிங்கள அரசு இதற்குரிய தண்டனையை அனுபவிக்க வேண்டும். அன்றுதான் இப்படுகொலையின் வடுக்கள் மறையக்கூடும்.



# கோபுரங்களால் ஏற்படும் ஆபத்துக்களுக்கு பொறுப்புக்கூறலைச் செய்வது யார்?



கடந்த வாரத் தொடர்ச்சி

தற்போது யாழ். மாநகர சபைகளுக்குள் முறையான அனுமதியற்ற வகையில் நிறுவப்படும் கோபுரங்களால் ஆபத்துக்கள் ஏற்படுமாயின் அதற்கு பொறுப்புக்கூறுவது யார் என தமிழர் கல்வித்துறைக்கு அரும்பணியாற்றி யாழ்.மாவட்டத்தில் மட்டுமன்றி நாடாளாவிய ரீதியில் தனக்கென்று தடம்பதித்திருந்த பொருளியல் ஆசான் மறைந்த வரதாராஜனின் புதல்வரும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ்.மாநகர சபை உறுப்பினருமான வ.பார்த்திபன் இலக்கு மின்னிதழுக்கு வழங்கிய விசேட செவ்வியில் கேள்வி எழுப்பியுள்ளார். அச்செவ்வியின் இறுதிப் பகுதி வருமாறு...

அது மட்டுமல்ல குறித்த கோபுரத்தின் தடிமன் என்ன? அது என்ன உலோகத்தால் செய்யப்பட்டது என்பது கூட எமக்கு தெரியாது. குறித்த கோபுரங்களின் அடித்தளத்தின் உறுதியின் தன்மை மற்றும் கோபுரத்தின் உறுதியின் தன்மை போன்ற விபரங்கள் எதுவும் இல்லாமல் அது நிறுவப்படுகின்றது. இந்நிலையில் அக்கோபுரம் சரிந்து விழாது என்பதனை எவ்வாறு உறுதிப்படுத்த முடியும்.

அத்துடன் 1986ஆம் ஆண்டு 03 மாதம் 10ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானப் அறிவித்தலின் படி நகர அபிவிருத்தி அதிகார சபையின் கட்டட விதிகளில் பவுண்டேசன்ஸ் என்ற தலைப்பின் கீழ் உள்ள பிரிவு 55 ஸ்ரீ 57 க்கு அமைவாக அனுமதி பெறப்படல் வேண்டும் ஆனால் அந்த அனுமதியும் பெறப்படவில்லை. 2009 ஏப்பிரல் மாதம் 17 ஆம் திகதி வெளி—யிடப்பட்ட வர்த்தகமானி அறிவித்தலின் படி 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் பிரகாரம் அனுமதி பெறவேண்டும்.

கடந்த வரவு செலவுத்திட்டத்தில் உறுப்பினர்களின் வெளிநாட்டு பயணத்திற்காக 10 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. அதை நாங்கள் நிராகரித்து விட்டோம். நாங்கள் வெளிநாடு செல்லவில்லை. ஆனால் முதல்வர் மாகாணசபை உறுப்பினராக இருக்கும் போதும் தற்போது முதல்வராக இருக்கும் போது பல

## தமிழினத்தை கருவறுக்கும் 5ஜி

**தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ்.மாநகர சபை உறுப்பினர் பார்த்திபன்**

நாடுகளுக்குச் சென்று வந்துள்ளார். ஆகவே அவருக்கு உண்மையான சிமாட் லாம் போல்கள் தெரியும். தற்போது நிறுவப்படுகின்றவை முதல்வர் கூறுவதுபோன்று இங்கு நிறுவப்படுவன எவையும் சிமாட் லாம் போல்கள் அல்ல.

**கேள்வி: தற்போது கோபுரங்கள் அமைக்கப்பட்டு வரும் நிலையில் அவற்றுக்கான அனுமதி பெறுவதிலிருந்து முறையான ஒழுங்குமுறை பின்பற்றப்படவில்லை என்று எந்த அடிப்படையில் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளீர்கள்?**

பதில்:— யாழ்.மாநகர சபையின் ஆதனத்தை குத்தகைக்கு அல்லது வாடகைக்கு விடுகின்ற போது மாநகர சபைக்கட்டளைச்சட்டத்தின் 40(எப்)ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய 35,37ஆம் பிரிவுகளின் பிரகாரம் உரித்தாக்கப்பட்ட ஆதனங்கள் அல்லது வேறுவகையாக சபைக்கு உரித்தாக்கப்பட்ட ஆதனங்களை விற்றல், குத்தகைக்கு வழங்குவதற்கு அமைச்சரின் அனுமதி பெறப்படவேண்டும். அதற்போது அமைச்சர் இல்லாத காரணத்தினால் ஆளுனரிடம் அனுமதி பெறவேண்டும்.

குறித்த ஆதனத்தின் குத்தகைப்பெறுமதி தொடர்பாக விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மதிப்பீட்டு அறிக்கை பெறப்படுவதோடு, பெறுகை நடைமுறைகளுக்கமைவாக ஆதனங்களைக் குத்தகைக்கு வழங்கி சட்டரீ—தியான ஒப்பந்தங்களை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறான எந்த நடைமுறையும் இதில் பின்பற்றப்படவில்லை.

மாநகர கட்டளைச்சட்டத்தின் 227 இன் பிரகாரம் 15000 ரூபாவிற்கும் ஒரு வருடத்திற்கும் குறைந்த ஒப்பந்தத்திற்கு யாழ்.மாநகர சபை ஆணையாளரும், மாநகர கட்டளைச்சட்டத்தின் 228 இன் பிரகாரம் 15000ரூபாவிற்கு மேற்பட்ட தொகைக்கும் ஒரு வருடத்திற்கும் மேற்பட்ட ஒப்பந்தத்திற்கு யாழ்.மாநர சபை முதல்வரும் ஆணையாளரும் கையொப்பமிடவேண்டும் என்பதுடன் மாநகர இறப்பர் முத்திரையும் பதிக்கப்பட வேண்டும். அவ்விடயமும் நடைபெற்றிருக்கவில்லை. மாறாக, குறித்த ஒப்பந்தம் 15000 ரூபாவிற்கும் ஒரு வருடத்திற்கும் மேற்பட்ட ஒப்பந்தமாக இருக்கின்றபோதும் அவ் ஒப்பந்தத்தில் யாழ்.மாநகர சபை முதல்வர் மட்டுமே கையெழுத்து இட்டுள்ளார். இது சட்ட ஏற்பாடுகளை மீறும் செயலாகும்.

அத்துடன் 11 ஆம் திகதி ஆகஸ்ட் மாதம் 2008 அம் திகதி இலங்கையில் உள்ள மாநகர முதல்வர்கள் மற்றும் நகரசபை, பிரதேச சபை தவிசாளர்களுக்கு எழுதிய கடிதத்தில் ஒரு திட்டமிடல் குழுவை அமைத்து நகர அபிவிருத்தி தொடர்பான மற்றும் கட்டிடங்கள் தொடர்பான விண்ணப்பங்களை குறித்த திட்டமிடல் குழுவில் விவாதித்து அதன் அடிப்படையில் தான் அனுமதி வழங்கப்படவேண்டும் என்று உள்ளது. யாழ். மாநகர சபையில் குறித்த திட்டமிடல் குழு இருக்கின்ற போதிலும் குறித்த திட்டமிடல் குழுவிற்கே தெரியாமல் இக்கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றின் அடிப்படையில் உரிய நிர்வாக நடைமுறைகள் அனுமதிகள் எதுவும் இன்றியே இவ்தொலைத் தொடர்பு கோபுரங்கள் நிறுவப்பட்டு வருகின்றன என்பது வெளிப்படை

**கேள்வி: வரலாற்று சிறப்பு மிக்க நல்லூர் ஆலயத்தில் குறிப்பிட்ட இடைவெளியில் கோபுரங்களை அமைப்பதற்கு விசனம் வெளியிட்டுள்ளீர்களே?**

பதில்;— நல்லூர் கோவிலைச் சுற்றி நான்கு கோபுரம் அமைக்கப்படுகின்றமைக்காக விசனம் வெளியிடவில்லை. மாறாக, கிட்டத்தட்ட 200, 300 மீற்றர் இடைவெளிக்குள் கோபுரங்களை அமைப்பதற்கான பின்னணியையே வெளிப்படுத்துகின்றேன். எல்லா இடத்திலும் தூர தூர இடங்களில் இந்த கோபுரங்களை அமைத்து விட்டு நல்லூரில் மட்டும் ஏன் 4 கோபுரங்களை அமைக்கின்றார்கள் என்றால், நல்லூர் கோவில் திருவிழா காலங்களில் அங்கு இலட்சணக்கான மக்கள் வருவார்கள், தொலைக்காட்சி நிறுவனங்கள் வெளிநாட்டு நிறுவனங்கள் நேரலை செய்வதற்கு வருவார்கள்,

5ஜி தொழில் நுட்பத்தில் விரும்பிய சாதனத்துக்கு விரும்பிய வேகத்தை கொடுக்கலாம் அதாவது ஒரு தொலைக்காட்சி நிலையத்திற்கு இந்த அளவு வேகத்தையும் இன்னொரு தொலைக்காட்சி நிறுவனத்திற்கு இன்னொரு வேகத்தையும் கொடுக்கலாம். இதனை மையப்படுத்தியே இவ்வாறான கோபுரங்கள் அமைக்கப்படுகின்றன.



ROAD DEVELOPMENT AUTHORITY
OFFICE OF THE CHIEF ENGINEER
BEACH ROAD, JAFFNA

MY NO: RDA/CE/JFW/215
09.07.2019

Smart Lamp Poles

R.D.A

வீதி அபிவிருத்தி அதிகார சபையால் வழங்கப்பட்ட பதில்


**கேள்வி: யாழ்.மாநகர முதல்வர் நடத்திய ஊடக வியலாளர் சந்திப்பில் கோபுரங்களை அமைப்பதற்கு தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையினதும் அனுமதி பெற்றுள்ளதாக கூறியுள்ளாரே?**

பதில்:— முதலாவதாக, யாழ்.துரையப்பா விளையாட்டு அரங்கு அமைக்கப்பட்டுள்ள இடத்தில் உள்ள கோபுரத்தில் அன்டனாக்கள் எவ்வாறு யாருடைய அனுமதியுடன் பொருத்தப்பட்டது, பொருத்தப்பட்ட அந்த அன்டனாக்கள் எந்த தொழில்நுட்பத்திற்குரியது. என்பதொரு கேள்வியாக இருக்கின்றது. அதனைவிடவும், இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவிடம் தகவல் அறியும் சட்டம் மூலமாக எழுப்பபட்ட வினாவுக்கு கிடைத்துள்ள பதில் கடித்தில் யாழ்.மாநகர சபை எல்லைக்குள் எந்த ஒரு சிமாட் லாம் போல்களை நிறுவுவதற்கும் அனுமதி வழங்கப்படவில்லை என்பதுடன் குறித்த நிறுவனம் எந்தவித அனுமதியும் இல்லாத ஒரு சேவை வழங்குனர் என்றும் தெரிவித்துள்ளது.

இலங்கை தொலைத்தொடர்பு ஆணைக்குழுவின் தகவலின் படி இலங்கை தொலைத்தொடர்பு ஆணைக்குழுவின் எந்த வித அனுமதியும் இல்லாமல் அதுவும் அனுமதிச்சான்றிதழ் இல்லாத ஒரு வழங்குனருடன் யாழ்.மாநகர சபை எவ்வாறு ஒரு ஒப்பந்தத்தை மேற்கொண்டுள்ளது என்பது முதல் பிரச்சினையாகின்றது. அடுத்து யாழ்.மாநகர சபை எல்லைக்குள் அனுமதியில்லாத ஒரு நிறுவனத்தின் நிர்மானங்களை எவ்வாறு நிறுவலாம்? என்பது அடுத்த பிரச்சினையாகின்றது.

இரண்டாவதாக, வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் தகவல் அறியும் சட்டம் மூலம் இது தொடர்பில் தகவல் ஒன்றினை கோரி—

தொடர்ச்சி 10ம் பக்கம்



My No:03/02/01/10
11th August 2008

UDA Circular No. 1

All Mayors of Municipal Councils
All Chairmen of Urban Councils
All Chairmen of Pradeshiya Sabhas

Dear Sir,

Decentralization of the UDA Planning & Development Control Functions to Local Authorities

Clause (I) of Circular No. 1 under reference 08/01/38 dated 1985/03/20 is hereby amended as follows:

(I) Establishment of Planning Committee

It is suggested that Planning Committee be set up consisting of the Mayor, Deputy Mayor/ Chairman, Deputy Chairman of the Urban Council/ Pradeshiya Sabha, Municipal Commissioner/ Secretary of Urban Council/ Pradeshiya Sabha, Heads of Divisions involved in the Planning Approval Process of the Local Authority and the Representative or Representatives of the UDA to decide on building applications and also to discuss and execute the Town Development Plan. The UDA representation is essential in convening a Planning Committee.

All other contents in the said Circular No. 1 remain unchanged.

Yours sincerely,

Prasanna Silva
Director General
Urban Development Authority

Sgd.
Dr. P. Ramanujam,
Actg. Chairman,
Urban Development Authority

Copy: 1. Secretary, My. of UDM&SAD - for information pl.
2. Secretary, My. of Prov. Council & Local Govt. - "
3. Commissioner Dept. of Local Govt. - "
4. D.D.Gs Provincial Offices /UDA - "
5. Directors, Provincial Offices/UDA - "
6. Dy. Directors District Offices/UDA - "
7. O.I.C./UDA Sub Offices - "

Type

திட்டமிடல் குழுவை நியமித்து அதன் ஊடாக அனுமதியை வழங்குமாறு கூறிய நகர அபிவிருத்தி அதிகார சபையின் கடிதம்

# சிறீலங்கா இராணுவத் தளபதி மனத்தில் குழப்பம்



சிறீலங்கா இராணுவத் தளபதி லெப். ஜெனரல் மகேஸ் சேனநாயக்கவின் பதவிக்காலம் இன்றுடன் முடிவடையவுள்ள நிலையில், புதிய இராணுவத் தளபதி தொடர்பான முடிவு இன்று சிறிலங்கா அதிபரால் அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சிறிலங்கா இராணுவத் தளபதி தொடர்பான அறிவிப்பை நேற்று அதிபர் மைத்திரிபால சிறிசேன வெளியிடுவார் என எதிர்பார்க்கப்பட்டது, எனினும், நேற்று எந்த அறிவிப்பும் வெளியாகவில்லை.

தற்போதைய இராணுவத் தளபதி லெப். ஜெனரல் மகேஸ் சேனநாயக்க சேவை நீடிப்பைக் கோரவில்லை என்று கூறப்படுகிறது. இந்த நிலையில் புதிய இராணுவத் தளபதிக்கான போட்டியில் நான்கு மூத்த மேஜர் ஜெனரல்கள் உள்ளனர். மேஜர் ஜெனரல்கள் சவேந்திர சில்வா, சத்யப்பிரிய லியனகே, தர்ஷன ஹெற்றியாராச்சி, குமுது பெரேரா ஆகிய நால்வரில், மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கே அதிக வாய்ப்புகள் உள்ளதாக கூறப்படுகிறது.

இவர் தற்போது இராணுவத்தின் இரண்டாவது நிலைப் பதவியான இராணுவத் தலைமை அதிகாரியாக இருக்கிறார். சிறீலங்கா அதிபர் மைத்திரிபால சிறிசேன இன்று இராணுவத் தளபதி தொடர்பான முடிவை அறிவிப்பார் என்று எதிர்பார்ப்பதாக, சிறீலங்கா இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அத்தபத்து தெரிவித்துள்ளார். தற்போதைய இராணுவத் தளபதிக்கு சேவை நீடிப்பு அளிக்கப்படுமா அல்லது புதிய தளபதி நியமிக்கப்படுவாரா என்பது குறித்து ஏதும் தெரியவில்லை என்றும் அவர் கூறியுள்ளார். அதேவேளை, இன்று புதிய இராணுவத் தளபதி நியமனம் தொடர்பான அறிவிப்பை சிறீலங்கா அதிபர் வெளியிடுவார் என, பாதுகாப்புச் செயலர் ஜெனரல் சாந்த கொட்டேகொடவும், தெரிவித்துள்ளார்.

எனினும், புதிய இராணுவத் தளபதி நியமனம் தொடர்பான எந்த தகவலும் தனக்குத் தெரியாது என, சிறீலங்கா அதிபரின் செயலர் உதய செனிவிரத்ன கூறியுள்ளார். இதற்கிடையே, புதிய இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவை நியமிக்க வேண்டும் என வலியுறுத்தும் சமூக வலைத்தளப் பரப்புரை ஒன்று தீவிரமாக இடம்பெற்று வருகிறது.முன்னொரு போதும் இல்லாத வகையில் மிகத் தீவிரமான முறையில் இந்தப் பரப்புரை இடம்பெற்று வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இதனிடையே, தற்போதைய பாதுகாப்பு நிலைமைகளைக் கருத்தில் கொண்டே, இராணுவத் தளபதி தொடர்பான முடிவை சிறிலங்கா அதிபர் மைத்திரிபால சிறிசேன எடுப்பார் என, பாதுகாப்பு ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். அதன்படி, தற்போதைய இராணுவத் தளபதி லெப். ஜெனரல் மகேஸ் சேனநாயக்கவுக்கு மூன்றாவது சேவை நீடிப்பு அளிக்கப்படலாம் என்றும், தகவல்கள் கூறுகின்றன.

# மட்டக்களப்பு வான்பரப்பில் மர்மப்பொருள் - அச்சத்தில் மக்கள்

மட்டக்களப்பு மாவட்டத்தின் சில பகுதிகளில் வெள்ளை நிறத்தினாலான மர்மப்பொருள் வானில் பறப்பதாக அங்குள்ள மக்கள் அச்சத்துடன் தெரிவித்துள்ளனர். வாழைச்சேனை, கிண்ணையடி, கும்புறுமூலை, ஓட்டமாவடி, மீராவோடை, மாஞ்சோலை, உட்பட பல பிரதேசங்களிலேயே இன்று (ஞாயிற்றுக்கிழமை) இவ்வாறு வான்பரப்பில் மர்மப்பொருள் பறப்பதாகவும் இதன் காரணமாக மக்கள் அச்சமடைந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

வெள்ளை நிறத்தினாலான பஞ்சு அல்லது சிலந்தி வலை போன்ற மர்மப் பொருள் வான்பரப்பில் பறப்பதோடு, சிலரது வீடுகள் மற்றும் மரங்களின் மேல் அவை காணப்படுகின்றமையால் பிரதேச மக்கள் அச்சத்துடன் குறித்த மர்மப்பொருளை அவதானித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். பஞ்சுவகை போன்ற குறித்த பொருளை சிலர் கையிலெடுத்து பார்த்தபோது அவை மென்மையாக காணப்படுவதாகவும் குறித்த மர்மப்பொருளில் சிறு பூச்சி இனங்கள் இருந்திருக்கலாம் என்ற சந்தேகம் உள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் இந்த மர்மப் பொருளினை பிரதேசத்திலுள்ள சிறுவர்கள் கையில் எடுத்து அதனை



சேகரித்து விளையாடும் முயற்சியில் ஈடுபட்டு வருவதாகவும் எமது பிராந்திய செய்தியாளர் தெரிவித்தார்.

# காஷ்மீர் தொடர்பான மகிந்தவின் கருத்துக்கு இந்தியா கடும் அதிருப்தி




இந்தியாவின் காஷ்மீர் விவகாரம் தொடர்பாக அண்மையில் மகிந்த ராஜபக்ச தெரிவித்த கருத்துக்கு இந்திய தூதரகம் தனது கடுமையான அதிருப்தியை மகிந்த தரப்புக்கு தெரிவித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது.

கொழும்பில் உள்ள இந்திய தூதரக அதிகாரிகள் பசில் ராஜபச்சவிடம் தமது அதிருப்தியை தெரிவித்துள்ளதாக அறிய முடிகிறது.

கடந்த வாரம் கொழும்பில் உள்ள தமிழ் வாரப் பத்திரிகை ஒன்றிற்கு வழங்கிய பேட்டியிலே தமிழ் மக்களின் பிரச்சனை தொடர்பாகவும் காஸ்மீர் விவகாரத்தையும் ஒப்பிட்டு பேசியிருந்தார். அதாவது காஷ்மீர் மக்கள் தனிநாட்டு கோரிக்கையை முன்வைத்ததாலேயே அவர்களின் சிறப்பு அந்தஸ்தை இந்தியா இரத்து செய்திருந்தது என்ற சாரப்பட கருத்து கூறியிருந்தார்.

தமிழ் மக்களும் இந்த யதார்த்தத்தை புரிந்துகொள்ள வேண்டும் என்ற கோணத்திலே கருத்து தெரிவித்திருந்தார். இந்த கருத்தை ஊடகங்களும் அதிக முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டிருந்தன. இது தொடர்பிலேயே இந்தியத் தூதரகம் மகிந்த ராஜபக்சவுடன் கடுமையாகக் கடிந்து கொண்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

---

**9ம் பக்க தொடர்ச்சி**

யிருந்தேன். அதற்கு பதில் அளித்த வீதி அபிவிருத்தி அதிகார சபையானது, யாழ். மாநகரசபை மற்றும் ஆகியோருக்கிடையான ஒப்பந்தம் மூலம் பொருத்தப்படும் சிமாட் லாம் போல்களுக்கான அனுமதி எதுவும் வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் பெறப்படவில்லை. மேலும் அதிகாரசபைக்குரிய வீதிகளில் இரண்டு சிமாட் லாம் போல்கள் அனுமதி பெறப்படாமல் நடப்பட்டுள்ளன. இது குறித்து யாழ்.மாநகர மேயருக்கும் யாழ். மாநகர ஆணையாளருக்கும் கடிதம் மூலம் அறிவித்துள்ளோம் என்றுள்ளது. ஆக வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் அனுமதி பெறப்பட வில்லை என்பதும் உறுதியாகின்றதே.

**கேள்வி: நிர்மானிக்கப்படும் கோபுரங்களால் சூழலுக்கான ஆபத்துள்ளதாக கூறியிருந்தீர்களே?**

பதில்:— ஆம், ஒரு உதாரணத்தினை முன்வைக்கின்றேன், கஸ்தூரியர் வீதியும் அரசடி வீதியும் இணையும் சந்தி. (யாழ்.இந்து ஆரம்ப பாடசாலைக்கு அருகில்.) மூன்று மிகப் பிரபல்யமான பாடசாலைகள், இரண்டு பிரபல்யமான தனியார் கல்வி நிலையங்கள் காணப்படுகின்றன.

அண்மையில் சில மணித்தியாலங்கள் நீடித்த மழையால் இப்பிரதேசம் வெள்ளக்காடாக மாறி— விட்டது. அந்த வெள்ள நீர் கார்களுக்கு சார்ஜ் போடலாம் என்று கூறப்படும் சிமாட் லாம் போலின் அடித்தளத்தை சேதமாக்கிவிட்டது. அதன் அடித்தளத்திற்கு இட்ட மண் இடிந்து கீழ் இறங்கியதுடன் கரைந்தும் சென்று விட்டது

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் ஒரு கட்டுமாணம் அமைக்க வேண்டுமாயின் மாநகர சபை கட்டளைச் சட்டம், நகர அபிவிருத்தி அதிகார சபையின் சட்டம் ஆகியவற்றின் பிரகாரம் யாழ்.மாநகர சபை மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபை ஆகியவற்றில் அக்கட்டிடத்தின் அடித்தளத்தின் உறுதிப்பாட்டினை உறுதிசெய்வதற்காக உரிய ஆவணங்களை சமர்ப்பித்து அனுமதி பெறவேண்டும் என்பது சட்டம்.

இச் சட்டமே ஒரு சாமானிய பொதுமகன் தன் வீட்டு மதிலை கட்டுவதற்கு கூட பயன்படுத்தப்படுகின்றது. இதை மீறிச் செயற்பட்டால் உடனடியாக சட்டம் பாய்ந்து அம்மதில் கட்டுமானத்தை தடுத்து நிறுத்துகின்றது. ஆனால் இவ்வளவு பெரிய கோபுரம் அமைப்பது தொடர்பிலும் அதன் அடித்தளத்தின் உறுதிப்பாடு தொடர்பிலும் எந்த அனுமதியும் பெறப்படவில்லை அதாவது கட்டட அனுமதிச் சான்றிதழ் பெறப்படவில்லை.

# வேட்பாளராக தெரிவாகும் முன்பே பிரச்சாரத்தை ஆரம்பித்த ரணில்

## அடியெடுத்துக் கொடுத்திருக்கும் சுமந்திரன்

**பூமிகன்**



இலங்கையின் சனாதிபதித் தேர்தல் நவம்பர் மாதத்தில் நடைபெறும் எனத் தெரிவிக்கப்படும் நிலையில், இலங்கையின் பிரதான கட்சிகளில் ஒன்றான ஐ.தே.க.வுக்குள் பூகம்பம் வெடித்துள்ளது. சனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவா? சஜித் பிரேமதாசவா? என்ற பிரச்சினையில் கட்சி இரண்டாகிப்போயுள்ளது. மிகப் பெரும் நெருக்கடிக்குள் கட்சி சிக்கித் தவிக்கும் நிலையில், கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் வந்து மூன்று நாட்களாகத் தங்கியிருந்து பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களில் பங்கேற்ற ரணில், அரசியல் தீர்வு குறித்தும் முதல் தடவையாகப் பேசியிருக்கின்றார். கூட்டமைப்பின் பேச்சாளரும், ரணிலின் தீவிர விசுவாசியாகக் கருதப்படுபவருமான சுமந்திரன் இலகுவாகப் பந்தைப் போட்டுக்கொடுக்க 'சிக்ஸர்' அடிக்க முயன்றுள்ளார் ரணில்.

இன நெருக்கடி விடயத்தில் பிரதான இரண்டு கட்சிகளுமே தமது தீர்வு இதுதான் என்பதைத் திட்டவட்டமாகச் சொல்வதற்கு தயங்கும் நிலைதான் தொடர்கின்றது. தீர்வைத் தரக் கூடிய கட்சிகளாகவும், தீர்வைக் குழப்பக் கூடிய கட்சிகளாகவும் இரண்டு பிரதான கட்சிகளுமே இருந்தாலும், தமது தீர்வு இதுதான் என்பதை வெளிப்படுத்தும் அரசியல் துணிச்சல் அந்தக் கட்சிகளிடம் இல்லை. இப்போதும், தன்னுடைய தீர்வுத் திட்டம் இதுதான் என்பதை வெளிப்படையாகச் சொல்லாமல், சுற்றிவளைத்து "பாராளுமன்ற வழிநடத்தல் குழுவில் இணக்கம் காணப்பட்ட அம்சங்களே எமது நிலைப்பாடு" என ரணில் கூறியிருக்கின்றார்.

வழிநடத்தல் குழுவில் இணக்கம் காணப்பட்ட விடயம் என்ன என்பதோ, அது தமிழ் மக்களுடைய அபிலாசைகளைத் தீர்க்கக்கூடியவை என்பதோ விவாதத்துக்குரிய விடயங்கள்தான்.

யாழ்ப்பாணத்தில் வைத்து இதனை அறிவிக்கவேண்டிய தேவையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் எழுப்பிய கேள்வி ஒன்றினால்தான் ரணிலுக்கு ஏற்பட்டது. யாழ். குருநகரில் வியாழக்கிழமை இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில், ரணிலின் முன்பாக உரையாற்றிய சுமந்திரன் இந்தக் கேள்வியை எழுப்பினார். "உங்களை ஒரு பிரதமராக அல்லாமல், சனாதிபதி வேட்பாளராக அல்லாமல், முக்கியமான கட்சித் தலைவர் என்ற முறையில் ஓர் கேள்வி கேட்க விரும்புகின்றோம். எங்களுடைய அரசியல் அபிலாசைகளுக்கு உங்கள் கட்சியின் நிலைப்பாடு என்ன? அதைத் தெளிவுபடுத்துவீர்களா?" என்பதுதான் சுமந்திரன் எழுப்பிய கேள்வி. சனாதிபதி வேட்பாளரை ஐ.தே.க. தெரிவு செய்ய முன்னரே ரணிலை சனாதிபதி வேட்பாளர் என சுமந்திரன் அறிவித்துவிட்டார் என்பது கவனிக்கத்தக்கது. இதற்குப் பதிலளித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, "அதிகாரப் பகிர்வு தொடர்பாக அரசமைப்பு பேரவை தனது அறிக்கையில் வெளிப்படுத்தியுள்ள கொள்கைக், கோட்பாடே தமிழர்களின் எதிர்பார்ப்புத் தொடர்பான ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரே நிலைப்பாடு. இந்த நாட்டில் தமிழினம் இலங்கை சனநாயகக் குடியரசு என்ற கட்டமைப்புக்குள் சமத்துவமாக, கௌரவமாக, சுயமரியாதையுடன், தங்களின் விடயங்களைத் தாங்களே முடிவெடுத்துக் கையாண்டு வாழவேண்டும் என்பதே எமது நம்பிக்கை" எனக் குறிப்பிட்டிருக்கின்றார். சுமந்திரன் எழுப்பிய கேள்விக்கு பிடி கொடுக்காமல், வழிநடத்தல் குழுவில் எட்டப்பட்ட இணக்கத்தையே தமது தீர்வாக பிரதமர் வெளிப்படுத்தியிருக்கின்றார்.

அரசியலமைப்பு உருவாக்கத்துக்கான வழிகாட்டல் குழுவின் மூல அறிக்கையில் அதிகாரப் பகிர்வு தொடர்பான கொள்கைகள், கோட்பாடுகள் என்ற தலைப்பில் 16 அம்சத் திட்டம் வரையப்பட்டிருந்தது. பல்வேறு கட்சிகளுடனும் நடந்த கலந்துரையாடல்களின் பின்னர் அரசமைப்புப் பேரவையாகக் கூடிய பாராளுமன்றத்துக்கு, வழிகாட்டல் குழுவின் இடைக்கால அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. அந்த இடைக்கால அறிக்கையில், எல்லாத் தரப்புகளும் ஏற்று இணங்கிக் கொண்ட அதிகாரப் பகிர்வுக்கான அம்சங்கள் என 14 விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றையே தமிழர்களின் அபிலாசைகளுக்கான தமது கட்சியின் நிலைப்பாடு என ரணில் இப்போது கூறுகின்றார் என்றே எடுத்துக்கொள்ள வேண்டும்.



இவை இணக்கம் காணப்பட்ட விடயங்கள் என ரணில் கூறினாலும், ராஜபக்ச தரப்பு இதற்கு முழுமையான இணக்கத்தை வெளி—யிட்டிருக்கவில்லை. அத்துடன், தமிழ் மக்களுடைய அபிலாசைகளை முழு அளவில் பூர்த்தி செய்யக் கூடியவையாகவும் இவை இருக்கவில்லை. அதனால்தான் அதன் விபரங்களை வெளிப்படுத்திக் கூறாமல், வெறுமனே இணக்கம் காணப்பட்ட விடயங்கள் எனக் கூறி அனைத்துத் தரப்பையும் திருப்திப்படுத்த ரணில் முற்பட்டிருக்கின்றார்.

2015 இல் பதவிக்கு வந்த மைத்திரி — ரணில் அரசு தீர்வைத் தரும் என கூட்டமைப்பு நம்பியதற்குப் பிரதான காரணமாக இருந்தது — அது தேசிய அரசாங்கமாக இருந்ததுதான். இலங்கையின் அரசியல் வரலாற்றில் முதன்முறையாக இரண்டு பிரதான போட்டிக் கட்சிகளும் இணைந்து ஒரு அரசாங்கத்தை அமைத்துக்கொண்டது அதுதான் முதல்முறை. அதனால், தீர்வு ஒன்றைப் பெற்றுக்கொள்ள முடியும் என கூட்டமைப்பு நம்பியது. புதிய அரசியலமைப்பு உருவாக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டு, அதற்கு தமது யோசனைகளைப் பெரும்பாலான கட்சிகள் சமர்ப்பித்த போதிலும், ஐ.தே.க. யோசனைகள் எதனையும் முன்வைப்பதை தவிர்த்துக்கொண்டது. இரண்டு பக்கத்தையும் சமாளிப்பதற்கான உபாயம்தான் அது. இந்த நிலையில், வழிநடத்தல் குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அம்சங்களைத் தமது தீர்வாக வெளிப்படுத்த ரணில் இப்போது முனைகிறார்.

இதனை முன்னெடுப்பதில் தமக்கிருந்த தடை பாராளுமன்றத்தில் பெரும்பான்மை தம்மிடம் இருக்காததுதான் எனவும் ரணில் கூறுகின்றார். சுமார் நான்கு வருடகாலம் பாராளுமன்றத்தில் இந்தப் பிரச்சினை ஆராயப்பட்டிருக்கின்றது. கூட்டமைப்பின் ஆதரவையும் பெறக்கூடிய நிலையில் பிரதமர் இருந்திருக்கின்றார். அதனைவிட எதிரணியில் உள்ள சிலரும் இனநெருக்கடிக்கான தீர்வுக்கு உதவத் தயாராகவே இருந்தார்கள். குறிப்பாக ஜே.வி.பி.. அதனால், வழிநடத்தல் குழுவின் செயற்பாடுகளைத் துரிதப்படுத்தி பாராளுமன்றத்தில் இதனை நிறைவேற்றுவதற்கான செயற்பாடுகளை மேற்கொண்டிருக்க முடியும். அதற்கான துணிச்சல் ரணிலுக்கு இருக்கவில்லை. ஆக, இந்தப் பிரச்சினை நீடிப்பதற்கு ரணிலும் ஒருவகையில் காரணமாக இருந்திருக்கின்றார்.

நான்கு வருடங்களில் கிடைத்த சந்தர்ப்பங்களைத் தவறவிட்டுவிட்டு, இப்போது யாழ்ப்பாணம் வந்து, இரண்டு வருடங்களில் தீர்வு எனவும், வழிநடத்தல் குழுவில் இணக்கம் கண்ட விடயங்கள்தான் எமது கட்சியின் தீர்வுத் திட்டம் என்ற வகையில் சொல்வது தேர்தலை இலக்காகக் கொண்ட கருத்தாக மட்டுமே இருக்கமுடியும். தமது தீர்வு இதுதான் என்பதையும், தமிழ் மக்களுடைய அன்றாடப் பிரச்சினைக்கான தீர்வு என்ன என்பதையும் திட்டவட்டமாக கூறக்கூடியவராக ரணில் இல்லை என்பதை அவரது குருநகர் பேச்சு வெளிப்படுத்துகின்றது. தமிழ் மக்களுக்கான தீர்வொன்றைத் தரக்கூடியவர் அவர்தான் என்பதை வெளிப்படுத்த எந்தளவுக்குத்தான் சுமந்திரன் முற்பட்டாலும், ரணிலின் அணுகுமுறை, "ஆற்றைக் கடக்கும் வரை மட்டும்தான் அண்ணனும் தம்பியும்" என்பதாகவே உள்ளது.

# பங்களாதேஷில் பாரிய தீ விபத்து: 15 ஆயிரம் வீடுகள் எரிந்து நாசம்

பங்களாதேஷில் ஏற்பட்ட பாரிய தீ விபத்தில் 15 ஆயிரம் வீடுகள் எரிந்து நாசமாகியுள்ளன. பங்களாதேஷ் தலைநகர் டாக்காவிலுள்ள சாலண்டிகா குடிசைப் பகுதி ஒன்றிலேயே கடந்த வெள்ளிக்கிழமை இந்த தீ விபத்து ஏற்பட்டுள்ளது. பிளாஸ்டிக்கினால் வீடுகளின் கூரைகள் அமைக்கப்பட்டமை காரணமாக தீயினை கட்டுப்படுத்துவதில் சிக்கல் ஏற்பட்டதாக அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த பாரிய தீ விபத்து காரணமாக 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் தங்களது



வீடுகளை இழந்துள்ளதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

இவ்வாறு வீடுகளை இழந்தவர்கள் தற்போது வீதிகளில் தஞ்சமடைந்துள்ளதாகவும் பங்களாதேஷ் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இதன்போது காயமடைந்தவர்கள் தற்போது வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு



சிகிச்சை பெற்றுவருவதாகவும் தெரிவிக்கப் படுகின்றது. இந்தநிலையில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படும் என பங்களாதேஷ் அரசாங்கம் அறிவித்துள்ளது.

# யாராலும் வெல்ல முடியாத திறன்களைப் பெற்று விளங்குகின்றதாம் வடகொரியாவின் ராணுவம்

யாராலும் வெல்ல முடியாத திறன்களை வடகொரிய இராணுவம் பெற்று விளங்குவதாக அந்நாட்டு இராணுவத்தை அந்நாட்டு அதிபர் புகழ்ந்தார் எனக் கூறப்படுகிறது. தென்கொரியாவுடன் இனிப் பேச்சு இல்லை என வடகொரியா அறிவித்துள்ளது. தென்கொரியாவை அச்சுறுத்தும் விதமாகவும், தனது படை பலத்தை நிரூபிக்கும் வகையிலும் வடகொரியா கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை மற்றும் அணுகுண்டுச் சோதனைகளை நடத்தி வந்தது. இது ஐ.நா. சபையின் தீர்மானங்களை மீறும் செயல் என்பதால் சர்வதேச அளவில் வடகொரியாவுக்கு எதிர்ப்பு கிளம்பியதோடு, அந்த நாடு தனிமைப்படுத்தப்பட்டது. ஆனாலும் வடகொரியா தனது போக்கை மாற்றிக்கொள்ளவில்லை.

இந்தச் சூழலில் கொரிய எல்லையில் அமெரிக்கா மற்றும் தென்கொரியா படைகள் கூட்டு போர்ப் பயிற்சியில் ஈடுபடுகின்றமையை எச்சரிக்கும் விதமாக வடகொரியா அண்மையில் அடுத்தடுத்து ஏவுகணைகளைச் சோதித்தது. ஆனால் அதை மீறியும் கூட்டுப்பயிற்சி தொடங்கப்பட்டது. இந்த நிலையில், ஜப்பானிய ஆட்சியில் இருந்து கொரியா விடுதலை பெற்ற தினத்தில் நாட்டு மக்களிடம் உரையாற்றிய தென்கொரிய அதிபர் மூன் ஜே இன் 2045 ஆம் ஆண்டுக்குள் கொரிய தீபகற்பம் ஒன்றிணைக்கப்படும் என கூறினார். இதனால் கடும் கோபம் அடைந்த வடகொரியா, இனி தென்கொரியாவுடன் அமைதி பேச்சு கிடையாது என அறிவித்துள்ளது. தென்கொரிய அதிபரின் உரைக்கு எதிராக வடகொரியா அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில் கூறப்பட்டிருப்பதாவது... கொரிய தீபகற்பத்தை மீண்டும் ஒன்றிணைப்பது குறித்த அவரது கருத்துகள் மிகவும் மோசமானவை.

அணு ஆயுதங்களைக் கைவிடுவது குறித்த பேச்சில் ஏற்பட்ட முட்டுக்கட்டைக்கு தென்கொரியா கூட்டுப் பயிற்சியை நடத்த முடிவெடுத்ததுதான் காரணம். எனவே தென்கொரியாவுடன் பேச எங்களுக்கு இனி வார்த்தைகள் இல்லை. இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டு உள்ளது. இந்தக் கூட்டுப் பயிற்சியை எச்சரிக்கும் விதமாக, 5 முறை ஏவுகணைகளை ஏவி சோதனை நடத்தியது வடகொரியா. நேற்று முன்தினம் புதிய ரக ஆயுதம் ஒன்றை, அதிபர் கிம் ஜாங் உன் மேற் பார்வையில் வடகொரிய இராணுவம் வெற்றிகரமாகச் சோதனை செய்து பார்த்துள்ளதாக அந்நாட்டு அரசு ஊடகமான கே.சி.என்.ஏ. கூறியுள்ளது. இராணுவத்தின் செயல்பாடுகள் மிகவும் திருப்திகரமாக உள்ளன என வடகொரிய அதிபர் பாராட்டினார் எனவும் அந்தச் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. மேலும் யாராலும் வெல்ல முடியாத திறன்களைப் பெற்று விளங்குவதாகவும் இராணுவத்தை அவர் புகழ்ந்தார் எனவும் கூறப்பட்டுள்ளது.

# ஆப்கானிஸ்தானில் குண்டுதாக்குதல் : 64 பேர் பலி

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் திருமண நிகழ்ச்சி ஒன்றில் பயங்கர குண்டு வெடித்ததில் 64க்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததாகவும், 183 பேர் காயம் அடைந்ததாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. ஆப்கானில் தாலிபன் மற்றும் உள்ளூர் ஐ.எஸ். இயக்கமும் இதுபோன்ற வெடிகுண்டுகள் மூலம் தாக்குதல் தொடுப்பது வழக்கம். இந்த குண்டுவெடிப்புக்கான காரணம் தெரியவில்லை. சனிக்கிழமை இரவு திருமண வரவேற்பு நிகழ்ச்சியின்போது நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கூடியிருந்த அரங்கில் திடீரென பலத்த சத்தத்துடன் குண்டுவெடித்துள்ளது. எங்கும் பதற்றம் காணப்பட்ட நிலையில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.




# காஷ்மீர் விவகாரம் இந்தியா - பாக். பேச வேண்டும் : டிரம்ப்

காஷ்மீர் விவகாரம் குறித்து இந்தியாவும் பாகிஸ்தானும் பேச்சு நடத்த வேண்டும் என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் தெரிவித்துள்ளார். காஷ்மீரின் சிறப்பு அந்தஸ்து நீக்கப்பட்ட விவகாரத்தில் பாகிஸ்தான் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகிறது. இது தொடர்பாக இந்தியாவுக்கு எதிராக உலக நாடுகளை ஒருங்கிணைக்கும் முயற்சியை பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் மேற்கொண்டு உள்ளார். அந்த வரிசையில் அமெரிக்க சனாதிபதி டிரம்புடன் நேற்று முன்தினம் அவர் தொலைபேசியில் பேசினார். அப்போது, "காஷ்மீரில் இந்தியா மேற்கொண்டிருக்கும் நடவடிக்கைகள் குறித்து பாகிஸ்தானின் கவலையை வெளியிட்ட அவர், இந்த நடவடிக்கை பிராந்திய அமைதிக்கு பங்கம் விளைவிப்பதாக இருக்கும்' என்றும் கூறினார். இந்த உரையாடலின் போது, அமெரிக்க அதிபர் டிரம்ப், ஜம்முகாஷ்மீர் விவ காரத்தால் இருநாடுகளுக்கும் இடையே ஏற்பட்டுள்ள பதற்றத்தை இருநாடுகளும் பேச்சு நடத்தித் தணிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார் என வெள்ளை மாளிகையின் ஊடகத் துணை செயலர் ஹோகன் கிட்லி வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்தார். ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸிலில், காஷ்மீர் விவகாரம் குறித்து ஆலோசனை நடைபெறும் முன் இரு தலைவர்களும் தொலைபேசியில் பேசினர் எனத் தெரிவிக்கப்பட்டது. எனினும், ஐ.நா. கூட்டம் முடிந்த பிறகே, இந்த தகவல் வெள்ளை மாளிகையால் வெளியிடப்பட்டது.



# நெகிழி உட்கொண்டதால் உயிரிழந்த கடற்பசுக் குட்டி

தாய்லாந்தில் கடற்பசுக் குட்டி ஒன்று உயிரிழந்தது அந்நாட்டு மக்களை பெரும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. மரியம் என்ற கடல் பசு ஒன்று நெகிழிப்பொருட்கள் உட்கொண்டதால் வயிற்று வலியால் அவதிப்பட்டது. கடந்த ஏப்ரல் மாதம் கடல் வாழ் உயிரின ஆய்வாளர்கள் இதை கவனித்த நிலையில் அந்தக் கடற்பசுவை அந்நாட்டு வனவிலங்கு மற்றும் தாவர பாதுகாப்பு மருத்துவமனையில் வைத்து தீவிர சிகிச்சை அளித்தனர். அவ்வப்போது கடற்பசுவின் உடல்நிலையில் ஏற்பட்ட முன்னேற்றம் குறித்து கடல் வளத்துறையின் ஃபேஸ்புக் பக்கத்தில் வீடியோக்களுடன் பதிவிடப்பட்டன. இதனால் தாய்லாந்து மக்களின் கவனத்தை மரியம் கடற்பசு ஈர்த்துவந்தது. இந்த நிலையில் 8 மாதமே ஆன மரியம் திடீரென இன்று அதிகாலை உயிரிழந்தது. குடலில் நெகிழிப் பொருட்கள் கணிசமாக இருந்ததால் காப்பாற்ற முடியவில்லை என மருத்துவர்கள் தெரிவித்தனர். இதனால் தாய்லாந்து மக்கள் மரியம் கடற்பசு குறித்து தங்களின் துயரை சமூக வலைத்தளங்களில் பதிவிட்டு வருகின்றனர்.

# நித்திரையில் நடப்பதன் அறிவியல் பின்னணி என்ன?



நித்திரையில் புரண்டு படுத்து போர்வையை இழுத்துப் போர்த்திக்கொள்வது வழக்கம். ஆனால் சிலர் இதைத் தவிர மேலும் சில செய்கைகள் செய்வர். அதில் ஒன்று நித்திரையில் எழுந்து நடப்பது. நித்திரையில் நடப்பவர்களில் சிலர், படுக்கையில் இருந்து எழுந்து படுக்கை அறையை அல்லது வீட்டில் உள்ள அறைகளின் கதவுகளைத் திறந்து வீட்டை வலம் வருவதும் உண்டு. இவர்களை சாதாரண நித்திரையில் நடப்பவர்கள் என்று கூறலாம். இதிலும் சில மோசமானவர்கள் உண்டு. இவர்கள் படுக்கை—யிலிருந்து எழுவது மட்டுமன்றி, உடைகளை சீராக உடுத்தி வாகனத்தை இயக்கி சில மைல்கள் தூரம் சென்று திரும்புவார்கள்.

உண்மையில் சொல்லப்போனால் சில இடங்களில் இம்மாதிரி நித்திரையில் நடப்பவர்களால் பல குற்றங்கள் நிகழ்த்தப்பட்டுள்ளன. இந்த குற்றப்பட்டியலில் சாதாரண திருட்டு முதல் கொலை வரை நடந்துள்ளன. நித்திரையில் நடப்பது ஏன் நிகழ்கிறது? அப்போது அவர்கள் தங்கள் கனவுலகத்தில் நிகழ்வதை நடத்துகிறார்களா அல்லது வேறு ஏதாவது காரணமா? நித்திரையில் நடப்பது என்பது, ஒரு மனிதன் ஆழ் தூக்கத்தில் இருக்கும் நிலையில் நிகழ்கிறது. இந்த தூக்கத்தை ஆங்கிலத்தில் NREM Sleep என்பர். அப்போது, நமது மூளையின் அலைகள் மிகவும் மெதுவாக நகர்கின்றன. மேலும், மூளையின் 'கிரே மேட்டர்' (Grey matter) பகுதி அமைதியாகவும், செயல்பாடு இன்றியும் காணப்படும். ஒரு நாளின் பகல் பொழுதில் நம் மூளையின் செயல்பாடு ஒரு தேன் கூட்டில் இருக்கும் நிகழ்வு போன்றது. ஆனால் அந்த NREM தூக்க நிலையில் அதே தேனீக்கள் இசைக்கும் வெறும் ரீங்காரமாக, இன்னும் அமைதி நிலையை எட்டாமல் காணப்படும். எனவே, அந்த தூக்க நிலையில் நமது உடல் நகரும் நிலையில் இருக்கும். அப்போது அது தூங்கும் மூளையுடன் ஜோடி சேரும். ழிஸிணிவி தூக்க நிலையில் மூளை அமைதியை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும். ஆனால் நமக்கு கனவு காணும் நிலைக்கு அழைத்துச்செல்லாது. எனவே உறக்கத்தில் நடப்பவர்கள் கனவுகளால் நடத்தப்படுபவர்கள் என்று எண்ணுவது தவறு.

இவ்வாறு நித்திரையில் நடப்பது, ஆழ்ந்த உறக்கத்தில் ஏற்படும் தூண்டுதல் கோளாறு என்றே விஞ்ஞானிகள் குறிப்பிடுகிறார்கள். நித்திரையில் நடப்பது எவ்வாறு நடைபெறுகிறது என்பது விஞ்ஞானிகளுக்கும் புதிராகவே உள்ளது. இருப்பினும் 'காபா' (GABA- Gamma Amino Butyric Acid) என்னும் ரசாயன செயல்பாட்டினால் இது நடக்கிறது என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

'காபா' மூளையின் செயல்பாட்டை இயக்கும் இயந்திர அமைப்பைத் தடுக்கிறது. இது சரியாக செயல்படும் போது ஒருவருக்கு உறக்கம் இயல்பாக நிகழ்கிறது. மேலும், தூக்கத்தில் தசைகளின் இயக்கத்தை அது கட்டுப்படுத்துகிறது. குழந்தைகளாக இருக்கும்போது 'காபா' வை வெளியேற்றும் நியூரான்கள் வளர்ந்துகொண்டே இருக்கும். ஆனால் முழுவதும் வளர்ந்து மூளையின் செயல்பாட்டை முழுவதும் இயக்கும். ஆனால் அந்த இயந்திர அமைப்பை கட்டுப்படுத்தும் அளவுக்கு வளர்ச்சி பெற்றிருக்காது. எனவே குறைவான அளவு உள்ள 'காபா' வினால் குழந்தைகள் தூக்க நடைக்கு உள்ளாவது இயல்பு எனக்கூறலாம். ஏனெனில் அந்த இயந்திர அமைப்பு உடம்பை தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து, தூக்கத்திலும் இயங்க வைக்கும். சில வளர்ந்த நபர்களில் கூட 'காபா' சுரத்தல் முழுவதும் இல்லாமல் இருக்கும். இது சில சுற்றுப்புற சூழ் நிலைகளால் கூட நிகழலாம். இதனால்தான் வயோதிகம் ஆனபோதும் நித்திரையில் நடப்பது நிறுத்தப்படாமல் நடந்து கொண்டே இருக்கும். ஒருவர் நித்திரையில் நடப்பவர் என்றால் அந்த பழக்கம் அவரது மூத்த குடும்ப உறுப்பினர்களால் அவருக்கு அளிக்கப்பட்டதாக இருக்கும். சில ஆய்வுகளின் படி பெற்றோர்களில் ஒருவருக்கு தூக்கத்தில் நடக்கும் பழக்கம் இருந்தால், அவரது குழந்தைக்கு அந்த பாதிப்பு ஏற்பட 45 சதவீதம் வாய்ப்பு உள்ளது. தாய்—தந்தை இருவருக்குமே இந்த பாதிப்பு இருந்தால் அவர்களின் குழந்தைக்கு இந்த பாதிப்பு வர 60 சதவீதம் வாய்ப்பு உண்டு.

# நீங்கள் எத்தனை வயது வரை உயிரோடு இருப்பீர்கள் என்பதை இரத்த பரிசோதனை மூலம் கண்டறிய முடியும்!



மரணமடைகிற நாள் தெரிந்தால் வாழ்கிற நாட்கள் நரகமாயிடும். சிவாஜி படத்தில் ரஜினி பேசிய வசனம் இது. வசனமாக இதை ரசித்தாலும், நம்முடைய ஆயுட்காலம் பற்றி தெரிந்துகொள்ள எப்பவுமே நமக்கு ஆர்வம் குறைந்தது இல்லை. இவ்வளவு நாட்கள் சாதகத்தின் மூலமாக அந்த தகவல்கள் ஒரு சிலருக்கு கிடைத்தது. தற்போது, இதனை இரத்த பரிசோதனை செய்வதன் மூலமாகவும் கண்டறிய முடியும் என கூறுகிறது அமெரிக்காவில் உள்ள யாலே பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் குழு.

இதுவரை உயிரணுக்களின் மூலக்கூறு மாற்றங்களை மட்டுமே அடிப்படையாக வைத்து ஆராய்ச்சி மேற்கொண்டுள்ள இக்குழு தற்போது ஆயுட்காலத்தை இரத்த பரிசோதனை மூலம் கண்டறியும் ஆராய்ச்சியை மேற்கொண்டு உள்ளது. இதற்காக இந்த ஆராய்ச்சி குழு அமெரிக்காவின் தேசிய சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து பரிசோதனையில் ஆவணம் செய்யப்பட்ட 42 ஆய்வுகளில் இருந்து முக்கியமான சில தரவுகளை ஆராய்ச்சிக்காக எடுத்து உள்ளது. இந்த தரவுகள் பல மனிதர்களை ஆய்வு மேற்கொண்டு பல ஆண்டுகளாக பத்திரப்படுத்தி வைக்கும் தரவுகள் ஆகும். குறிப்பாக 1988 முதல் 1994 இடைப்பட்ட காலத்தில் பத்தாயிரம் மனிதர்களை ஆய்வு மேற்கொண்டும், 1999 முதல் 2010 வரை—யிலான காலத்தில் பதினோராயிரம் மனிதர்களை ஆய்வு மேற்கொண்டும் அவர்களது இரத்த மாதிரிகளில் இருந்து உயிர் இழப்பதற்கான காரணிகளை ஆய்வு செய்தனர். அதில் குளுக்கோஸ் அளவுகள், ஆல்புமின் அளவுகள், புரத அளவுகள், WBC அளவுகள் போன்ற பல காரணிகள் ஆய்வுக்காக எடுத்துக் கொள்ளப் பட்டது. இப்போது இந்தக் காரணிகளை இரத்த மாதிரியை ஆய்வு மேற்கொண்டு ஒரு மனிதனின் ஆயுட்காலத்தை கண்டறிந்து கொள்ளலாம் என்று அந்த ஆராய்ச்சி குழு தெரிவித்திருக்கிறது.

# அமெரிக்காவின் வேவு பார்க்கும் 'ட்ரோன்'கள்!

அமெரிக்க இராணுவம், ஆளில்லாமல் பறந்து சென்று தாக்கும், 'ட்ரோன்'ன்களை அதிக அளவில் பயன்படுத்துகிறது. இப்போது அதன் புதிய திருப்பமாக, சிறிய ட்ரோன்களை அதிகளவில் ஏவி, உளவு பார்க்க, 'ஆப்செட்' என்ற புதிய திட்டத்தை உருவாக்கி இருக்கிறது. பாலைவனம், மலைகள், காடுகள் போன்ற இடங்களில், தீவிரவாதிகள் மீது தாக்குதல் நடத்த, பெரிய விமானம் அளவிற்கான ட்ரோன்கள் பயன்படுகின்றன. ஆனால், பொதுமக்கள் வசிக்கும் நகர்ப்புறங்களிலும் இப்போது தீவிரவாதிகள் பதுங்கியிருக்கும் கட்டடங்களை தாக்க வேண்டியுள்ளது. இதற்கு தான் ஆப்செட்திட்டம் பயன்படும். அண்மையில், ஒரு செயற்கையான நகர வீதியை செட் அமைத்து, அங்கு சில டஜன் ட்ரோன்களை ஏவி, ஒரு கட்டடத்தை சுற்றி வளைத்து வேவு பார்க்கும் ஒத்திகையை நடத்தியது, அமெரிக்க இராணுவத்தின், 'தார்பா' அமைப்பு.

இந்த ட்ரோன்கள் தானே இயங்கும் திறன் கொண்டவை. ஒன்றோடு ஒன்று தொடர்பு கொண்டு தகவல் பறிமாறவும், தரையில் இருக்கும் இராணுவ அதிகாரிக்கு தகவல் தரவும் இவற்றால் முடியும். இப்படி பல ட்ரோன்கள் ஒருங்கிணைந்து செயல்படும்போது, பயங்கர வாதிகள் பதுங்கியிருக்கும் கட்டடத்தை சுற்றி வளைத்து முற்றுகையிட முடிவதோடு, அடுத்த நடவடிக்கை பற்றி துல்லியமாக இராணுவத்தினர் திட்டமிட்டு நிறைவேற்றவும் முடியும். அடுத்து வரும் சில மாதங்களில், மேலும் ஆறு ஆப்செட் ஒத்திகைகளை அமெரிக்க இராணுவம் மேற்கொள்ளவிருக்கிறது.

